1933

JL
M211, N32NV
N33.2.7
177175

# நவசக்தி

திங்கள் வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 AUG 1933
MADRAS

‘எவ்வுயிர்க்கும் அன்பாயிரு’ ‘என்கடன் பணிசெய்து கிடப்பதே’

சிலம்பு ௧௩. 1933௵ ஜூலை௴ பரல் ௯

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| பூகோள விலாசம் ... ... | ... ௩௦௫ |
| நமது சிந்தனை ... ... | ... ௩௧௧ |
| உப்பு வாயுவும் உப்புவாயு உரக்களும் ... | ... ௩௧௫ |
| “ தன்னையென்றுங் கருத்தெய்வம் ” ... | ... ௩௧௯ |
| திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும் ... | ... ௩௨௭ |
| பிறர் நம்மைக்கண்ட விதம் ... | ... ௩௨௮ |
| சுந்தர சுலோசனை ... ... | ... ௩௩௫ |
| இடியேறு ... ... | ... ௩௩௯ |

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

பாம்பன்:

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

## இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு | 0 | 8 |
| ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட சம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு. | 1 | 0 |
| வேதவியாசம் | 0 | 10 |
| சிவபாதனுவியாச மூலமு முரையும் 2-ஆம் பதிப்பு. | 0 | 11 |
| பத்துப் பிரபந்தம் | 0 | 7 |
| தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும் | 2 | 8 |
| பரிபூரணனந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும் | 2 | 0 |
| சுத்தாத்வைத நிர்ணயம் | 0 | 3 |
| திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும் | 10 | 0 |
| ஸ்ரீமத் குமாரசுவாமியம் | 5 | 0 |
| செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வே ளிறுமாப்பும் | 0 | 6 |
| சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு | 0 | 6 |
| குமரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு | 0 | 2 |
| குமரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல் | 3 | 8 |
| அமைதி யைம்பதென்னுஞ் சேந்தன் செந்தமிழ் | 0 | 2 |
| சண்முக சகச்சிரநாமார்ச்சனை | 0 | 4 |
| செவியறிவுறூஉ | 0 | 1⅓ |
| ஷை காலிகோ பைண்டு | 0 | 2½ |
| பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் | 0 | 8 |
| ஷை சரித்திரம் காலிகோ | 0 | 12 |

## ஜோதிட நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சர்வ சோதிட சஞ்சீவி ... | 1 | 8 |
| சிற்பநூற் பொக்கிஷம் ... | 1 | 0 |
| சோதிட பாரா சாரியம் ... | 0 | 12 |
| உடுதசாப்ரதீபிகை ... ... | 0 | 12 |
| வீமேசுர உள்ள முடையான் 2-ம் பாகம் ... ... ... | 1 | 0 |
| வான சேகர சப்தகேள தீபம் ... | 2 | 0 |
| சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும் ... ... | 0 | 6 |
| ஜோதிட ஆசிரியன் 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ... | 1 | 0 |
| அந்தர பலன் ... | 1 | 0 |

## வைத்திய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| புலஸ்தியர் கற்பம் 300 ... | 1 | 0 |
| அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200 ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் அமுத கலைக்கியானம் | 1 | 4 |
| அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360 ... ... | 0 | 12 |
| இராம தேவரென்ற யாகோபு சுன்னை சூஸ்திரம் 155 ... | 0 | 12 |
| ,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 .. | 0 | 10 |
| ,, லோகச் செந்தூரம் 300 ... | 0 | 12 |
| ,, பஞ்ச மித்திரம் 300 ... | 0 | 14 |
| ,, வாத வைத்தியம் 300 ... | 0 | 14 |
| ,, வாத சூஸ்திரம் 400 ... | 1 | 4 |
| ,, தண்டகம் 100 ... | 0 | 12 |
| ,, வைத்திய சூஸ்திரம் 150 | 0 | 10 |
| ,, வைத்தியம் 300 (மருந்து சுத்தியும் நாடி விவரமும்) | 0 | 14 |
| ,, சுன்னம் 600 ... | 1 | 8 |
| ,, வைத்திய சிந்தாமணி 700 | 1 | 8 |
| ,, வைத்திய கல்லாடம் ... | 1 | 4 |
| ,, சுன்னம் 300 ... | 0 | 14 |
| சித்த வைத்திய அகராதி ... | 2 | 8 |
| திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ... | 2 | 0 |
| பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு ... ... ... | 1 | 8 |
| அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம் | 0 | 12 |
| இராம தேவர் சிவயோகம் ... | 0 | 8 |
| அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குரு நூல் 100-ம் மகேஜண்மணி தீட்சை 100-ம் ... ... ... | 0 | 12 |
| கருவூரார் வாதகாவியம் 700 ... | 1 | 0 |
| சட்டை முனிவர் ஞானம் ... | 0 | 4 |
| அகஸ்தியர் வைத்திய பூரணம் 205 | 0 | 12 |
| நந்தீஸ்வரர் நிகண்டு ... ... | 0 | 12 |
| விஷ வைத்திய மாந்திரீக ஔஷத விஷ ஆரூடம் ... ... | 2 | 8 |
| அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள் ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் நயனவிதி 1500 உரை நாகமுனிவர் 200 ... ... | 1 | 4 |

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை



Registered No. M. 1500.

# நவசக்தி

'...ர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

கரூ ஸ்ரீமுகஞூ ஆடிமீ பரல் கூ



OFFICE OF THE ... 17 AUG 1933 MADRAS


## பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

மீயான் மனமிளகி யீந்திடினு மிங்கிவர்கள்
மாய்வா ரிருமதியில் மானனையீர்—ஏயுமிரு
காதுதனைப் பொத்திற் சுதனுமொலி கேளாதேல்
மாதே யெழுநாளின் மாரணமாஞ்—சோதிதரு
கண்ணைவிர லாலமிழ்த்திற் [1]காணும்விழி தோன்றுதே
லெண்ணிலஞ்சா நாளி லிறந்திடுவர்—கண்ணுறங்கிற்

### கனவுக்குறி

காணுங் கனவிற் கழுதைநரி நாய்கழுகு
தோணுங் கருங்காகஞ் சூழ்பருந்து—நீணிலத்தி
லின்னவைக ளென்மேலி னேறத் தினங்காணில்
முன்னிடுவ ரந்தகனை மும்மதியி—னின்னுங்
கருங்குறளன் றொருவன் காங்குருநற் கச்சை
மருங்கி னிடையின் வனைந்து—கருங்கண்டபொன்
றேந்திவரக் கண்டா லிறந்திடுவ ரோர்மதியிற்
சார்ந்த கரியகுறட் டையறனைத்—தேர்ந்திடவுங்
கண்டா லொருமதியிற் காலனூர் புக்கிடுவர்
பண்டிறந்தோ ரின்றொருவன் பையவந்து—தண்டித்துக்
கட்டிக் கொடுபோகக் கண்டா லொருமதியில்
விட்டிடு வாருயிரை மேதினியில்—மட்டலருஞ்
செம்மாலை செஞ்சாந்தஞ் சேர்த்தணியத் தான்காணின்
மும்மதியி னுவி முடிந்திடுவர்—தம்முடலி
லெண்ணெ யிடக்கரங்க ளீர மயிரொறியக்
கண்ணதனிற் காணிற் கடுங்கூற்ற—னண்ணுபாஞ்
சென்றிடுவ ரோர்மதியிற் றேனே கனவினங்கேள்
குன்றம் பலவிருக்கங் கோட்டிடபம்—வென்றிதரு
காரானை யுப்பரிகை கண்டதன்மே லேறிநிற்கிற்
பார்மீதிற் செந்நீர் பருகிடவு—கோரகச்
செத்தபிணங் கண்டிடநற் சேயிழையைத் தோயமலந்
தத்தமெய்யிற் பூசிடவுந் தான்கண்டாற்—சுத்தமுடன்

(பிரதி)—[1]காணுமொழி.

மாறாத் திருவோங்கி வாழ்ந்திருப்ப ரின்னமுங்கேள்
ஏறாரு மீச னிறைவனிப—மீறான
பொன்பணியே ரான்காணிற் போற்றுங் கிளைஞருடன்
இன்பநுகர்ந் தேவாழ்வ ரிந்திரன்போல்—பின்போலும்
மான்காண நீண்ட மரத்திற் கனிபறிக்கத்
தான்காணில் மெத்தத் தனஞ்சேருங்—கான்காணும்
பன்னகந் தேளட்டை பற்றித் தனைக்கடிக்கப்
பின்னுநல்ல வெள்ளுரகம் பீதியின்றித்—தன்னிடது
கைவிட்டு மற்றவலக் கையிற் கடித்திடவு
மெய்யாகக் கண்டால் வெகுலாபந்—துய்யதாம்
பருப்பதத்தின் மேடைகளிற் பாங்காக வேறிக்
குரைக்குங் கடலிற் குதித்துத்—திரைக்கடலை
நீந்திக் கரையேறி நிற்கவுங்கண் டான்மிடித்த
மாந்தரும்பூ பாலரென வாழ்ந்திருப்பர்—சேர்ந்திருக்கும்
புண்டரிகப் பத்திரியிற் போசனநெய் பாயாசங்
கண்டா லுலகாளுங் காவலனாந்—திண்டாடுஞ்
சேவல்கிரௌஞ்சமிவை செங்கையினில் வைத்திருக்க
ஆவலுடன் [1]காண வருங்குலத்துப்—பூவையரைத்
தானடைவன் காலிற் றளையிடவுந் தன்னையொரு
மானிடன்கை யாற்பிடித்து மற்கட்டத்—தானிவைகள்
கண்டால்நற் கீர்த்திபெறு கான்முளையுண் டாமினங்கேள்
உண்டா மனையி லுயரணையிற்—றண்டாத
வாகனத்தி லாசனத்தில் வன்னிபடக் கண்டதுண்டேற்
கோகனக மாதுமகிழ் கூர்ந்திருப்பள்—மாகமதிற்
சந்திரனைச் சூரியனைத் தான்கண்டால் நோயாளர்
நொந்தபிணி தீருமந்த நோயில்லார்—முந்துறவே
கண்டாற் றனலாபங் கைகூடும் செவ்விரத்த
முண்டாற் சுராபான முண்டாற்போற்—கண்டாக்கால்
வேத ரெனிற்பிரம வித்தையடை வார்கள்மற்றச்
சாதியெனி லைசொரியம் தானடைவர்—சோதிக்குங்
கோட்டு விலங்கு குரங்குபன்றி நாயிவைதான்
வாட்ட முறத்துரத்தி வந்ததென—நாட்டமுறக்
கண்டால் வெகுதுயரங் காவலரால் அச்சமுறுந்
தண்டாப் பரிரதத்தில் தான்பூண்டு—கொண்டதொரு
தேரின்மே லேறிச் சிறந்திருக்கக் கண்டதுண்டேல்
பாரில்நிதி கோடியுறும் பண்டிரதத்—தேரிடையில்
ஒட்டகம்வா லேப முரத்தகிடாப் பூண்டதன்மேல்
சட்ட முடனிருக்கத் தான்கண்டால்—துட்டரினால்
துக்கமுண்டாந் தன்சிரத்தில் தொக்கதனி லெண்ணெயிட்டுப்
பக்குவஞ்சே ரன்னம் பருகிடவே—சக்கதனிற்
காணிற் பிணியுறுங்கட் டாரிகுடை பாதுகைமுன்
தோணிற் பயணந் துலைபோக்குந்—தோணியின்மேல்
ஏறி நதிகடக்க வேகாணிற் றூரதலை
ஏறிப்பின் மீண்டிடுவர் இன்புறவே—கூறும்
நதிகண்ணிற் காணில்நிதி தான்சேரும் நெய்க்கு

(பிரதி)—[1]காண்க.



நிதிகோடி சேர்த்தியுறும் நெய்தான்—புதிதாகத்
துய்த்திடவுங் கண்டால் துயரமுறு மான்றதியைத்
துய்க்கவெகு கீர்த்திச் சுகமுண்டாம்—மிக்கான
ஆன்பாலின் மேற்பட்டு மாடை யுடன்பருகத்
தான்சோம பானந் தருமவற்குத்—தேன்போலும்
கோதுபைங் கண்டாக்காற் கூட்டா நிதிகூடும்
போதில சோகம் புரகாலிப்—போதிவைகள்
கண்ணாரக் கண்டாற் கடுந்துயரம் கற்பூரம்
தண்ணா ரகில்சாந்தஞ் சாந்தாத்திக்—கண்ணீர்சேர்
துய்யவெள்ளைப் போதிவைகள் தோன்றவே கண்காணில்
ஐயமில்லாச் செல்வ மதுவெய்தும்—வையமிசை
மாண்ட பிரேதம் வலத்தாளைத் [1]தான்புசிக்கக்
காண்டலிற்பொன் னைஞ்ஞூறு கைசேரு—மீண்டுமதன்
கைபுசிக்கில் ஆயிரம்பொன் கைகூடும் பின்னதன்மேல்
எய்துஞ் சிரமதனை யேபுசிக்கில்—மெய்யயுதம்
பொன்சேரும் உண்மையிது போகமுத்தம் தாம்பூலம்
மின்போற் பிரபைதரும் வெண்பணிலம்—பின்னாறும்
சந்தனநீ லோற்பலப்பூ சாதிக்காய் தக்கோலம்
வந்த கிராம்புதயிர் வாரமுது—முந்திலஞ்சிப்
பூவிளக்குக் கன்னிகையார் பொற்றுவசம் வெண்கவிகைக்
கேவிளங்க வாழ்வுதரும் எந்நாளும்—மேவுசிவ
பூசைசெயக் கண்டாக்காற் [2]போர்க்களத்தில் வெற்றிதரும்
மாசிலா வெள்ளையினில் வன்பருத்தி—தேசுதரு
நெல்லன்ன மோடுதிரு நீறிவைகள் மூன்றொழிய
நல்லவெண்மை [3]காண நலமாகும்—நல்ல
கறுப்பிற் பசுப்பூட்கைக் காணுமறை வேதா
நெறிப்பிலெதிர் தேவதைகள் நீங்கக்—குறிப்புடன்மற்
றெல்லாக் கறுப்பும் [4]எதிர்காண வாதையுறும்
பொல்லாத ரோகம் பொருந்தியிடும்—நல்லாய்கேள்
இன்னகன வெல்லா மிசைந்தமுதற் சாமமது
தன்னில் வருடமொன்றில் தான்பலிதம்—பின்னிரண்டாம்
சாமமெனிற் றிங்களெட்டில் தான்பலித மாமூன்றாஞ்
சாமமெனில் மும்மதியில் தான்பலிதம்—சாமமொரு
நாலிற் றசதினத்தில் நண்ணுமரு ணோதயத்திற்
கேலு முடன்பலித மேயாகு—மேலுமின்ன

## பிற குறிகள்

குன்றனைய மென்முலையாய் கூறக்கே ளிந்தினைத்தான்
என்றினைத்தா ஞேர்கண்ணா லேபார்த்து—நின்றுதன்கை
ஓர்விரலி னால்மறைக்கில் ஓங்குங் கதிர்நெரியில்
மாரணமாந் திங்களொன்றில் மானனையீர்—தாரணியில்
ஒத்த தளத்தி லுயர்வான் களங்கமறில்
பத்தடிக்கு ளந்தடிமேற் பாரதனிற்—சுத்தமுள்ள
மெய்நிழலைக் கண்ணால் மிகப்பார்த்து விண்ணோக்கில்
மெய்போல் உருவமொன்று மேல்தோன்றும்—ஐயமில்லாப்

(பிரதி)—[1]தான் பொசிக்கக். [2]பொற்களத்தில் வெத்திதரும். [3]காண்க. [4]எதிர் காணக.

பச்சைநிற மாயிருந்தால் பக்கமொன்றில் தன்கிளைஞர்க்
கச்சமுறு மைப்போல் அதுகாணில்—வச்சபிணி
தன்னால் வருத்தந் தருமுருவிற் கைகுறையிற்
சொன்னமதி யாறினுயிர் தோற்றிடுவர்—பின்னுருவிற்
சென்னி குறைந்திருந்தால் திங்களொரு மூன்றளவிற்
றன்னடியால் வைதரணி தான்கடப்பன்—பன்னுகுறி
இன்ன மனேகமுண்டா மெல்லையற்ற பல்லுயிர்கள்
மன்னு பரதகண்ட வாறிதுவாம்—சொன்னவுத்த

## மனுவின் பெயரும் ஆயுளும்

425 ராயணமும் விண்ணவருக் கோர்பகலாம் கங்குல்தெக்க
ணாயணமா மீதிரண்டோர் நாளாகும்—சேயிழையீர்
இந்நாண்முந் நூற்றறுப தென்னிலோர் திவ்வியவாண்
டன்னவாண் டீராறு மாயிரந்தான்—மன்னு
சதுரயுக மாகுமது தானெழுபத் தொன்று
மதுரமொழி யீர்மனுவின் வாணாள்—சதுரயுகம்
ஓரா யிரம்பிரமற் கோர்பகலா மப்பகலிற்
காரூரும் வேந்தரிரு காலேழு—பேரிறப்பர்
அந்த யுகமுமிரண் டாயிரமோர் நாளயனுக்
கிந்தநாள் முப்பா னெனின்மாதம்—வந்தவொரு
430 மாதமுமுந் நான்குகொண்டால் வருசமாம் வருசமந்நூ
றேறுதிமற்கு வாணாளா மொண்டொடியீர்—ஓதிமருங்
கோடி யிறக்கிற் குலவுகண்ணன் கோர்பகல் பொன்
னுடையனு மிம்முறைநா ளுண்டிருப்பன்—நீடுமனுப்
பேரும் விளம்புகிறேன் பெண்ணே சுவாயம்பு
சேருஞ் சுவரோச் சிதமனுப்பின்—பார்புகழு
முத்தமன் [1]றாமசன்பின் றேறு மிரேவதனும்
வைத்தபுகழ்ச் சாக்குடன்வை வச்சுதனு—மெத்திசையுஞ்
சாற்றுவசா வன்யமனுத் தக்கசா வன்யனிருண்
மாற்றும் பிரமசா வன்யமனு—நாற்றிசையுஞ்
435 சீர்தருசா வன்யமனுச் செப்புசீர்ச் சாவன்யன்
பார்புகழு ரோச்சியன் பௌம்யமனுப்—பேரிவர்கள்

## பிரியவிரதமனுவின் மக்கள் பதின்மர்

பன்னுங்கின் முந்தப் பகர்சுவா யம்புதவு
மின்னே பிரிய விரதனென்பா—னந்நாளிற்
சம்புநெடுந் தீவுமுதற் சார்ந்தபெருந் தீவேழு
மும்பர்கோ னென்ன வொருகுடைக்கீழ்ச்—சொம்பாகச்
செங்கோல் செலுத்தினன்பின் சேவுயர்த்தோன் றாள்நினைந்து
தங்கா நெடுநாட் டவம்புரிந்து—பங்கமுறு
கிரஞ்சு புத்திரரை யீன்றா னவர்பெயர்கே
ளாரஞ் செறிமேதை யக்கினியும்—போரஞ்சா
440 வாகுதுதி மான்வபுட்டு மாணுக்கி னேத்திரனுஞ்
சோகந் தருசவனன் சோதிடுமான்—வேகமுள
அவ்வியன்மே தாதிதியென் றையிரண்டு புத்திரரிற்
செவ்வியனு மேதை திடவாகு—மவ்வலனி
யக்கினியிம் மூவர்களு மைம்புலனுந் தானடக்கித்
தக்க துறவின் றலைநின்றார்—மிக்கவுள்ள
புத்திரர்க ளேழ்வரையும் போர்த்தநெடுந் தீவேழும்
பத்திரமா யாளப் [1]பணித்திட்டான்—சுத்தமுள்ள

## ஆக்கினேத்திரன் மக்கள் ஒன்பதின்மர்

சம்புநெடுந் தீவுதனைத் தாணுக்கி னேத்திரனும்
நம்பிப் புரந்தான்பின் னாளதற்பின்—கிம்புருடன்
445 பத்ராச் சுவனுவி பாங்கா யிளாவிரத
னெத்திசையும் போற்று மிரண்மயனும்—புத்தியுள்ள
கேதுமா லன்னிரண்யன் கீர்த்திபெறு நற்குருவோ
டோதுமரி யிவ்வொன்பா னுத்தமரை—நீதியுட
னீன்றா னவர்கட் கிசைந்துசம்புத் தீவதனைச்
சான்றுயொன் பான்பிரிவாய்த் தானளித்தான்—தோன்றுமவ
ராண்டதினு லன்னோர் பெயரா யமைந்ததிந்த
நீண்டநவ கண்டமும் நேரிழையீர்—பூண்ட
பனிவரைக்குத் தெற்காகப் பாரினையுங் நாபி
யினிதாண்டு பின்விடயற் கீந்தான்—கனிதா
450 யிடபன் பரதனையு மீன்றிப்பார் தன்னைத்
திடமாகக் காவென்று செப்பி—முடிபுனைந்து
வீடடைந்தான் பின்பரதன் மேதினியைத் தான்புரந்தா
னாடி யவன்புரந்த நற்கண்டம்—நீடும்

## பரதகண்டத் தீவுகள் ஒன்பது

பரதகண்ட மென்றுபெயர் பாவையே யிந்தப்
பரதகண்டந் தீவொன் பதுவாஞ்—சாதங்கேள்
இந்திரநற் சேருகத்தீ வேற்றுமெழிற் றும்பிரத்தீ
வந்தமுள்ள நாகங்கை வத்தியுடன்—முந்துஞ்
சவுமியம்பின் காந்திருவஞ் சாரும் வருணா
மிவையினுடன் நற்குமரி யென்னும்—நவமாகுந்
455 தீவுக ளொன்றொன்று சேர்சகத்திர யோசனையா
மேவுங் குமரியொன்று விட்டொழியத்—தீவெட்டில்
தானதவ மாச்சிரமஞ் சாதிபே தங்களின்றி
யூனமிகு மாரியர்க ளுற்றிருப்ப—ரீனமிலார்

## நால் வேதம் ஆறு சாத்திரம்

சேர்ந்திருக்கும் நற்குமரித் தீவுதனி லேயிருக்கு
மாய்ந்தவெசுர் சாம மதருவணம்—வாய்ந்தமறை
யிந்நான்கு சிட்சைகற்ப மேநிருத்தஞ் சந்தசுவுஞ்
சொன்ன வியாகரணஞ் சோதிடமு—மின்னேயிவ்

## இருபானெட்டு ஆகமங்கள்

வங்கமோ ராறு மருங்கா மிகமுடனே
சிங்கார யோகசமுஞ் சிந்திதமு—மங்காத

(பிரதி)—[1]றாமசன்பின்.

(பிரதி)—[1]பணிக்திட்டான்.

460 காரணம்பின் ஞமசிதங் காட்சியகு ணத்தீத்த
மாரணநே ருஞ்சகத்ர மங்குசமான்—பார்புகழுஞ்
சுப்பிர பேதமொடு சூக்குமம்பின் வீரதந்த்ர
மெய்ப்பாம் விசையம் விசுவாச—மிப்ப[ர]ற்சு
வாயம் பவமனலம் மாமகுடம் விம்பமுட
னேயும் விமல [1]மிரவுரவம்—நேயமுள்ள
சந்திர ஞானஞ் சறுவோத்தஞ் சந்தானம்
வந்தசித்தம் புரோக்கிதமும் வாதுளமு—முந்தும்
பரமே சுரம்லளிதம் பன்னுங் கிரண
மிருபானெட் டாகமமு மின்னுந்—திரமான

## பதினெண் புராணம்

465 சைவம் பவுடிகஞ் சாற்றுமாற் கண்டமொடு
மெய்யா மிலிங்க மிருகூர்மம்—பொய்யில்லாக்
காந்தம் வராகங் கருடமச்ச வாமனமும்
பாந்தபிர மாண்டம்விண்டு பாகவதஞ்—சேர்ந்ததொரு
நாரதம்பின் காருடம் நற்பிரம[ம்] பிற்பதுமங்
காரிருணீக் கும்பிரம கைவர்த்தம்—பேரழலி
ஞக்கினே யம்பதினெட் டாகும் புராணமுடன்

## பதினெண் மனுவாக்கியங்கள்

வாக்கியங்கேள் விண்டுமனு வாசிட்டந்—தீர்க்கமுள்ள
மங்கோச நல்லியம மாபத்தம் வைதிகிரி
யங்கிரா வியாத மருந்ததியந்—தங்காத்தியஞ்
470 சாதாரநற் குரவஞ் சங்குயிச மோடயனங்
காசார் பராசமிரு கற்பதியுந்—தீதில்
பயிரவ மென்னுமனுப் பத்தெட்டு மற்று
மியல்சேரெண் ணெண்கலையெண் ணன்கு—செயிர்தீர்மா
வாக்கியங்கட் கேற்ற மருந்தா முபநிடதந்
தாக்கு மிலக்கணங்க ளீனைந்தும்—பாக்கியஞ்சேர்

## நதிகளின் சிறப்பு

கங்கைமுத லெட்டெட்டாங் கோடிகட வுண்ணதியிற்
சங்கநிறை கங்கை சரச்சுபதி—துங்கபத்ரை
சந்திர பாகை சரையுவித்தை காழுந்தி
வந்த கிருஷ்ணை வருகவுரி—மந்தகைநற்
475 றேரயை நிருமதைசு சோபணைவி பாகைதுற்கை
மாயைதவிர் வேத வதிப்புனை—நாயகமாங்
கோமதிபன் ஞசை குமரி திரிசாமை
தாமசிவ யொட்டினி சமனுபதி—நாமமிளிர்
பொன்னி வதிசை பொருனைவைகை சித்ரநதி
யின்னமுத லஞ்ஞூ றெனுநதியு—மன்னும்

## மலைகளின் சிறப்பு

பொதிய முத[ற்]கோடி பூதரங்க டன்னிற்
சிதைவிலா மாயேந் திரம்பின்—பொதியகிரி

(பிரதி)—[1]னிமிர விரவம்.



சையகிரி விந்த்யகிரி சாற்று மிருககிரி
ஐயமில்லாச் சுத்திகம்பா ரியாத்திரகிரி—மெய்யான
480 சத்த கிரிமுதலாய்த் தானு யிரங்கிரியு
மத்தல மாயிரமாங் கோடியதி—னுத்தமமாங்

## சிவாலயங்களின் சிறப்பு

காசி யருணகிரி காளத்தி காஞ்சிநகர்
வீசுகழுக் குன்றம் விருத்தகிரி—தேசார்பொன்
னம்பலநன் னாரூ ருட்காழி காரோணம்
வெம்பும் வினையகற்றும் வெண்ணெய்நல்லூர்—நம்புந்
திருப்பா திரிப்புலியூர் தென்புகலூர் யார்க்கும்
விருப்பாந் திருக்குடந்தை வேத—மருச்சனைசெய்
வேதவனம் வீழி மிழலைதிரு வையாறு
மாதவனந் தீர்கெவுரி மாயூரஞ்—சீதவனஞ்
485 சேரு மிடைமருதூர் தென்றுறைசை செங்கமலை
யாரும் புகழவரு மானைக்கா—சீராருங்
கூடல் புனவாசல் குற்றால மாப்பனூ
ரேடகநெல் வேலியிரா மேச்சுரமு—மாடானை
தென்பரங்குன் றார்சுழிசை தென்திருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூவணமங்கை—யின்பமிகு
மின்ன தலமுதலா யிரஞ்ஞூற் றெட்டாகு
மன்னவையின் மிக்கா யருள்பெருகும்—பன்னகஞ்சேர்

## [1]மருதூர் நாகநாதர் சிறப்பும் பெருமையும்

தென்மருதூ ரொன்று சிவலோக மொப்பாகும்
வன்மருத வில்வ வனம்நெருங்கும்—பொன்மருவு
490 மாலயற்குந் தேவருக்கு மாதவர்க்கு வாசமதாஞ்
சீலமுள்ள ஞானியருஞ் சேர்ந்திருப்பர்—மேலும்
பிறக்க நினைக்கப் பெயருரைக்கக் கேட்க
விறக்கவந்து காணமுத்தி யெய்துஞ்—சிறக்குந்
திருநா மமுமிருபத் தெட்டெனவே செப்பு
மொருநாக தீர்த்தமதி லுண்டா—மருகாகச்
சென்றுதெரி சித்தோர்முன் செய்தகொடும் பாவமெல்லா
மென்றுள்வரக் கண்ட விருள்போலாத்—துன்றலையில்
தீர்த்திவலை மேற்தெறிக்க நீறெலமெல் லாம்புரப்பர்
பார்த்திதொருகீர்த் துன்னி பருகியிடிற்—கூர்த்தவிருள்
495 நெஞ்சினிருள் நீங்கிமருள் நீங்க வறிவுபெற்றும்
பஞ்ச விலக்கணங்கோர் பாவலராந்—தஞ்சமென
அந்நீரி லாடி லருந்தார்க டாய்முலைப்பால்
பின்னொரு முன்னவராய்ப் பேறடைவா—ரின்னமந்தத்
தீர்த்த மகிமையெம்மாற் செப்பரிதென் றேபிரமன்
மூத்த முனிவர்க்கு முன்மொழிந்தான்—பூத்தமலர்க்
கொன்றைச் சடையன் கொடிவிடைய னீசன்
துன்றுப்புவ னம்படைத்த தொன்னுளில்—நன்றிகிள
ரோஞ்ஞூ றெண்கிரண மேகமாய் வில்வமரத்
தூரடியி லிங்கச் சயம்பானோன்—சீர்பெருகு

500 மம்பிகையா டிற்கை யபிராணி பொன்மடந்தை
நம்பு மருந்தநிமின் ஞமடந்தை—வெம்பி
வருந்து மகிலிகையாள் மாமறைகள் நான்கும்
பொருந்துபிர மன்மேகம் போன்றேன்—பெருந்தவத்துக்
கோதமனென் றிந்து குமரன் கபிலமுனி
மாதவஞ்சேர் காந்திருவ மாணிபத்ரன்—தீதகலுஞ்
சேடன் றிசையுரகர் தென்மலைய மாமுனிவ
ஞடி யருச்சனைசெய் நாகேச—ஞேடிவரும்
வைகை நதியான் வளர்மேற்குச் சன்னிதியான்
வைகை நதியின் வடகரையான்—பொய்கைவரும்
505 வேடனுக்குக் காட்சியருண் மெய்யின்ஞன் மெய்க்குருவாய்ச்
சேடனுக்கு ஞானமுப தேசித்தோ—ஞடிவருந்
திக்கரவம் பூசைசெய்யச் சித்திகொடுத் தேயவருந்
திக்கரவை மாற்றுவிக்குஞ் சிற்சோதி—சக்கிரிமுன்
பெற்றசா [1]பந்துலைத்தான் பின்புளிஞ ராயிரவர்க்
குற்றசா பந்தனையு மோட்டிஞேன்—சுற்றமுடன்
நல்குரவி ஞல்மெலியும் நாகமய்யன் வேண்டநிதி
நல்கிரச வாதம் நவின்றபிரான்—கல்குரவு
தீரமதி மானெனுமோர் தெய்வமறை யோன்துதிக்க
ஈரமுடன் செம்பொற் கிழியீந்தோன்—கோரந்
510 தருதவனந் தீர்க்குந் தவலோகத் தாரை
மருதம்வில்வ மாயமைத்த வள்ளல்—சுருதிபகர்
காலமோ ராறுங் கசிந்துருகிப் பூசைசெய்யுஞ்
சீலமுள்ள நாகநம்பி தேவிநங்கை—பாலகியை
வேட்டுமணக் கோலம் விரும்புகும்ப மாமுனிக்குக்
காட்டியருள் செய்த கடவுளா—னீட்டுபுகழ்க்
காசிநகர் வாழ்மறையோன் காதலனை வாளரவம்
பாச முறும்பசியாற் பற்றிநுங்கப்—பூசானுஞ்
சிந்தை கலங்கித் திகைத்தழுங்கும் வேளையினில்
அந்தணன்போல் வந்தவனை யஞ்சலென்று—முந்தவுமர்
515 நாகந் தனையழைத்து நன்மகவைக் கக்குவித்துச்
சோகந் தவிர்த்த சுடரொளியான்—வேகவதி
நாடதனிற் காரடர்ந்த நற்குடியில் வாழ்மறவன்
மூடனிரு கண்ணில்லான் முத்தமிழும்—பாடத்
தெரிவித்தே யந்தாதி செப்புகென முற்சீர்
தருவித் தருள்புரிந்த சம்பு—பரிசுத்த
மொல்லாவுந் தன்மகவா மூகையினைப் பேசுவிக்க
அல்லாவென் றேத்து மடியிணையா—னல்லபுகழ்ச்
சித்தன் மதுரச் செவந்திலிங்க மாமுனிநம்
பத்தனென வாண்ட பரஞ்சோதி—யித்தரையிற்
520 நேசமன்பத் தாறினுள்ளுஞ் [2]சென்மித்து வாழ்மனுக்கள்
நேசமுட னென்னெய்நெய்பால் நெல்லரிசி—பூசணிக்காய்
காணிக்கை யுள்ளதுவுங் கையாரக் கொண்டுவந்து
பேணிக் கொடுத்துப் பிறப்பொழிக்கும்—வேணிப்

(தொடரும்)

(பிரதி)—[1]பந்துலைந்தான். [2]சென்மித்த.

# நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

## VI

### பழக்கம்

அவனியில் நாமடையும் வெற்றி - சுகம் - இன்பம் இன்னபிற நன்மைகள் நமது மனதில் - எண்ணத்தில் இருக்கின்றன என்று கண்டோம். ஒரு போக்கான எண்ணங்களையே நெடுநாள் கருத்திலிருத்துவதால், அப்போக்கான எண்ணங்களையே எண்ணுவது ஒரு பழக்கமாக ஆகிவிடுகின்றது. இது எண்ணப் பழக்கம் - ஒருதிற எண்ணப் பழக்கம்-கால அளவில் முதிர்ச்சியடைந்து அத்திற நடைப்பழக்கமாகப் பழுக்கின்றது. இவ்விதம் முற்றிய பழக்கங்கள் பல ஒன்று சேர்ந்து நமது வாழ்வை ஆக்கி ஆளுகின்றன.

வாழ்வு பழக்கங்களின் தொகுதி. பிறந்தது முதல் இறக்கும் வரை, காலை படுக்கை நீத்தது தொட்டு இரவு துயிலணையுமட்டும், நாம் செய்வன, பேசுவன, தின்பன, பருகுவன, உணர்வன யாவும் நமது பழக்கத்தின் பாற்பட்டன.

நாம் பழக்கமாகச் செய்யும் ஒன்று, பருகும் ஒன்று, அயிலும் ஒன்று, ஒரு பகல் இல்லாவிட்டால் நாம் படும்பாடு தரையுற்ற மீனிற்குக்கூடத் தெரியாது. எண்ணங்களின் வலியோ அதிகம். அவை முற்றிப் பழக்க உருவடைந்தபின் அவைகளின் வன்மை சொல்லி முடியாததாகும்.

ஒரு தீய பழக்கம் நம்மைப் பற்றிக்கொள்ள விட்டுவிட்டால் பின் நாமடையும் அல்லலை அளக்கலாகாது. அதன் வன்மை குலையும்வரை நம்மை அது அலை கடற்றும்பென அலைத்துவிடும். அவைகள் பலவற்றின் வாய்ப்பட்டவன் கதியைச் சொல்லவும் வேண்டுமோ? அவன் ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சு. எத்தனை தீர்மானங்கள் செய்து கொள்ளட்டும். உரிய காலம் வந்ததும் பழக்கம் மகனை வழக்கமாகச் செய்யும் ஒன்றைச் செய்துவிடும்படி கட்டாயப் படுத்தியே தீருகின்றது.

தீப்பழக்கத்தால் வீழும் மாந்தர் மன்பதையில் எத்தனை கோடி? குடிப்பழக்கம் ஒன்றால் மட்டும் மாளும் மக்கள் எத்தனை சங்கம்? அவர்கள் பொருளிழந்து, சுகங்கெட்டு, வலிகுறைந்து, குடும்பம் குலைந்து வருந்தினும், ஆயிரந்தடவை "இனிக் குடியை விட்டுவிடவேண்டும்" என்று மனதில் சட்டங்கள் இயற்றிக் கொண்டாலும், அக்காலம் கிட்டியதும் "இப்பொழுது மட்டும் கடைசியாக ஒருதரம், நாளை நிச்சயம் இல்லை" என்று "நாளைக்குடியாராக" விளங்குகின்றவர் எத்தனை லட்சம்? தீப்பழக்கத்தின் வலி அம்மம்ம! பெரிது! பெரிது!! மிகப்பெரிது!!!

தீப்பழக்கம் உடனே இன்பம் தருவதுபோல் தோன்றுவது; பின் துன்பம் நல்குவது; சுகத்தைக் கெடுப்பது; உயிரை வாட்டுவது; மனதை மயக்கி விரைவில் பற்றுவது; இலகுவில் நீங்காதது. நற்பழக்கம் ஆரம்பத்தில் சிரமமாகத் தோன்றுவது; தொடக்குடைய மனதில் இலேசில் பற்றாதது; நாளடைவில் நன்மை பயப்பது; வாழ்வை ஆக்குவது; அந்தமிலின்பம் நல்குவது; புகழ் அளிப்பது; அறிவைப் பெருக்குவது.

தீப்பழக்கம் இயற்கையுடன் இறையுடன் இணையாதது; மனிதனை வேறுபடுத்துவது; இயற்கை ஒழுங்குடன் முரண்பட்டுக்கலக்கம் விளைவிப்பது; நற்பழக்கம் இயற்கையுடன் ஒன்று பட்டது; மனிதனை அதனுடன் ஒன்றுபடுத்துவது; இயற்கைச் சட்டங்களுக்கு ஒத்ததால் அமைதி யளிப்பது.

நாம் நலனடைய வேண்டில் தீப்பழக்கங்களைத் தூரத் தள்ளல் வேண்டும். தீயன செயல் நீக்கல் வேண்டும். நற்பழக்கம் நற்செயல் இவைகளை எண்

ணல் வேண்டும். இயற்கைச் சட்டம் ஒழுங்கு முறையில் நமது இயலை மாற்றல்வேண்டும். வாழ்வு சிறக்க வேண்டில், உயிர் கூர்தல் வேண்டில், அறிவு பெருக வேண்டில், உடல் நலன் வேண்டில், முடிவில் இன்பு வேண்டில், நமது காரியம் கணக்குகள் நன்மையாக ஏற்படல் வேண்டும்.

இம்மாறுதல் பலவிதமாக நடைபெறலாம். எரி ஒழுக்கம் முற்றினபோது வரும் தீச்சம்பவங்களால் ஒருவன் நன்மைக்குத் திரும்பலாம். குடியன் தனது வெறியில் பொல்லாத தீங்கு—கொலை புரிகின்றான். பின் உணர்வுற்ற போது அப்பொல்லாங்கின் விளைவை அறிந்ததும் அவனது மனம் திடுக்கிடுகின்றது. இவ்வதிர்ச்சியால் அவன் உள்ளம் திரும்பிப் பழக்கம் மாறுகின்றது. குடி எண்ணம் எழும்பும்போது, அதனால் விளைந்த தீங்கும் நினைவில் வந்து, அவனைக் குடியா வண்ணம் தடுக்கின்றது. இந் நிகழ்ச்சி தீப்பழக்கம் முற்றியபின், ஒருநாள் வந்து தீரும். முற்றிய பின் பழக்கத்தைத் திருப்ப வரும் பெரிய தீங்கு நடக்கும் வரை ஏன் ஒருவன் காத்திருக்க வேண்டும்?

துன்ப அனுபவங்களால் நாம் சீர்படுவதைவிட நாமே அறிந்து மாறுவது சிறப்பு. புதிய தீப்பழக்கங்கள் பழகாதிருத்தல் ஒருதலை. நாளேறாத, முழுவலி பெறாத சிறு தீ நடத்தைகளைச் சிறிது சிறிதாக நீக்கல் வேண்டும். சின்னவைகளை அடக்கும் திறன் நாளடைவில் பெரும்பகைகளை வீழ்த்திச் சீரிய நிலைகளை வெல்லும் ஆற்றலாக வந்தமையும். பழக்கம் முற்றுமுன் அதை வெல்வது எளிதாகவும் ஆகலாம். கூரிய முள்வேலை முளையிலே களையினல்லால், அது முற்றி மரமாகிய போது நவியமும் மடியு மன்றோ?

நாளேறிய தீப்பழக்கங்களை ஒழிப்பது சற்று வருத்தந்தான். ஆயினும் நாம் நன்மையடைதற்குத் தீயனநீக்கல் இன்றியமையாத தாகும். இம்முயற்சியில் வரும் பொல்லாங்குகளை நாம் பொறுத்துக் கொளத்தான் வேண்டும். வேறு உயரவழி கிடையாது. சிலகாலம் பொறுக்க வேண்டிய இவ்வருத்தத்திற்குப் பயந்து, அறிவுடைய யாரே என்றும் பொறுக்க இயலாத துன்பக் கடலில் முழுகிக் கிடக்கச் சம்மதிப்பர்?

தீப்பழக்கம் எரி எண்ணத்தின் முதிர்ச்சி. இது மாறவேண்டில் எரி எண்ணம் ஒழியவேண்டும். ஆதிகாரணமாய எண்ணத்தைத் திருப்பாது பழக்கத்தை மாற்றல் இயலாது. மன நோக்கத்தை மாற்றாது செயலை மாற்ற முயல்வது நடவாத காரியம். எரி நினைவை மனதிற்கொண்டு, நற்செய்கை செய்ய எத்தனிப்பது எட்டிவிதை யிட்டு மாங்கனி சுவைக்க விழைவதொக்கும்.

சித்தத்தினின்றும் தீயன அழிந்து தெளிவுறல் வேண்டும். அது நன்மையாக வேண்டும். இம்மாற்றம் இன்று நாளைக்குள் நடவாது. பழக்கத்தின் முதிர்ச்சி—வலிவுக்குத் தக்கபடி, நமது முயற்சிக்குத் தகுந்த வண்ணம், மாதமோ, வருடமோ, ஆயுளோ சென்று விடலாம். காலம் எத்துணை நீண்டால் என்ன? இக்காரியம் மட்டும் செய்யாமல் நாம் விடுதலை யடைய முடியாது.

இச் சீர்திருத்தம் செய்ய ஆழ்ந்த அவா வேண்டும். துன்பம் வந்துற்ற போதுதோன்றிய ஓடும் அவா (Passing desire) பயனளியாது. உள்ளத்தினுள்ளிருந்து வெளிவந்த அவாவே வலியுடைத்து. இது இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது.

அகத்தில் அரும்பும் அவாவே சாலப் பெரிய செயல்களையும் செய்து முடிக்க வல்ல ஆற்றல் அளிக்கின்றது. அவாவின்றி நாம் ஒருசிறு காரியத்தையும் இயற்றல் முடியாது. இது இயற்கை நியதி. இச்சையே உலகத்தை ஆக்கியது.

அவாவுக்குப் பின் உறுதி (Will power) வேண்டப்படும். ஒரு காரியம் செய்யக் கூடாதென்று உணர்ந்தால் என்ன வரினும், உயிர் போய்விடும்



போல் தோன்றினும் அக்காரியத்தைச் செய்யாமலிருக்கும் உறுதி இருக்க வேண்டும். இவ்வுறுதி வலிமையடையா விட்டால் மனதைப் பண் செய்ய முற்படுபவன் "இன்று மட்டும் கடைசியாக" என்று சுவரில் எழுதி விட வேண்டியதே.

மூன்றாவதாக எரி எண்ணம் எழுந்த போது அதை நீக்கச் செய்யும் பயிற்சி, அதற்கு எதிர் மாறான நினைப்பை உறுதியுடன் சிந்திப்பதால் இச்சீர்திருத்தம் நடைபெறும். மனதிற்கு ஊக்கந்தரும் நன்முயற்சிகளில் ஈடுபடுவதும் எரி எண்ணத்தை மறக்கப் பெரும் உதவி செய்யும்.

நான்காவதாக ஒரு கணமும் வாளா இருக்கலாகாது. எந்நேரமும் மனதிற்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அத்தொழில் நன்மையாக இருக்கட்டும் என்று கூறவேண்டுவதில்லை. சோம்பேறி மனம் பேயின் தொழிற்சாலை.

ஐந்தாவதாக ஆண்டவன் குணங்களைச் சதா சிந்தித்திருப்பது மிக்க நலன் தரும். யாண்டும் நிறைந்த இறையை நம்மைக் காப்பாற்றிக் கரை ஏற்றும்படி வேண்டிக்கொள்வது மனத் தடிப்பை மாற்றும். அவன்து இயலை விளக்கும் நூல்களை ஓதல், அவ்வியலில் படிந்தோர் சரிதம் கேட்டல், அவர்கள் கோலியவழி நடக்க முற்படல் இவைகள் மனதைத் தெளிவிக்கும் சிறந்த வழிகள்.

கடைசியாக இச் சீர்திருத்தத்திற்கு — நெஞ்சத்திற்கு — அடிப்படையாக உள்ளது தியானம். நாம் அடைய விழையும் நிலையைப் பற்றி மட்டும் குறித்த காலங்களில், தினம் தவறாது சிறப்பாகச் செய்யும் ஆழ்ந்த சிந்தனையால் எல்லாத் தீப்பழக்கங்களையும் மாற்றி, உயர்வை அடைந்து, நம்முள்ளொரு நவசக்தியைப் பெருக்கிச் சிறப்படையலாம்.

# உப்புவாயுவும் உப்புவாயு உரங்களும்

[திரு. V. S. கிருஷ்ணசாமி, B. A.]

**நை**ட்ராஜன் அல்லது உப்புவாயு ஆகாயத்தில் ஐந்தில் நாலு பங்குள்ளதென்று பலரும் அறிந்ததே. பாக்கி ஒரு பங்கு பிராண வாயுவாகும். இவ்வளவு அதிகமாயுள்ள உப்புவாயு உபயோகமின்றி வீணாய்த்தா னிருக்கிறது. சிறிது காலம் வரை ஆகாயத்தில் கிடைக்கும் உப்புவாயுவை உபயோகப்படுத்த முடியாதென்றே கருதப்பட்டு வந்தது. மேலும் பொதுவாய் அதிக உபயோகமற்ற தென்றும் எண்ணப்பட்டு வந்தது. இப்பொழுதுதான் அதன் உபயோகம் நன்கு ஆராய்ந்து காணப்பட்டுள்ளது.

பூமியில் வளரும் மரஞ் செடி கொடிகளுக்கு உப்புவாயு இன்றியமையாதது. பூமியிலேயே அது கலந்த ரஸாயனப் பொருள்கள் கிடைக்கின்றன. உப்புவாயுவுள்ள வஸ்துக்கள் நல்ல உரமாகும். இவ்வகை உரத்தை உபயோகிப்பதால் செடி கொடிகள் புஷ்டியாயும் நேர்த்தியாயும் வளரும்.

ஆனால் செடிகளுக்கு உப்புவாயுவை நேரே எடுத்துக்கொள்ளும் சக்தி கிடையாது. பூமியில் பக்டீரியா என்னும் வகையைச் சேர்ந்த நுண்ணிய ஜந்துக்கள் அநேகம் உள. அவற்றில் ஒரு வகை, செடிகளின் வேர்களில் குடியேறி அங்கிருந்து கொண்டே பூமியிலிருந்து உப்புவாயுவைப் பிரித்து உபயோகப்படுத்தும். அவைகளால் பிரிக்கப்பட்ட உப்புவாயுவையே செடிகளும் உட்கொண்டு வளர ஆரம்பிக்கும்.

இங்ஙனம் பூமியிலுள்ள உப்புவாயுவெல்லாம் அநேகமாய்ச் செலவழிந்துவிட்டனவென்றே இப்பொழுதுஎண்ணவேண்டியிருக்கிறது. வனப்புற்றுசெழித்தோங்கின பிரதேசங்கள் இப்பொழுது செழிப்பிழந்து காணப்படுகின்றன. தென்னப்பிரிக்காவிலுள்ள 'வெல்ட்' பிரதேசம் வஸந்த காலத்தில் மாஞ்செடி கொடிகளோடு செழித்தும், மற்ற காலங்களில் வாடி உலர்ந்த பிரதேசமாய்த் தென்படுவதும் சகஜமாயிருக்கிறது. இது, அப்பிரதேசம் கூடிய சீக்கிரம் பாலைவனமாகும் என்பதைக் காட்டும் அறிகுறி என்று தத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

மேற்சொன்னவாறு செழிப்பழிந்துவரும் பிரதேசங்களெல்லாம், உப்புவாயு போதாமையால் தான் அங்ஙனம் மாறுகின்றனவாம். ஆகவே அதற்கேற்றபடி தக்க எருக்களை அதாவது உப்புவாயு அதிகமுள்ள ரஸாயனப் பொருள்கள் கலந்த எருக்களை உபயோகிக்கவேண்டும் என்று விஞ்ஞானவிற்பன்னர்கள் கூறுகிறார்கள். அத்தகைய எருவினால் உலர்ந்த பிரதேசமும் வனப்படையும் என்பதை எளிதில் பின்வருமாறு பரீட்சித்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஏதேனும் ஓர் இடத்தில் வஸந்த காலத்தில் உப்புவாயு உள்ள எருவைப் பரப்பிவைத்தால் அந்தப் பிரதேசத்தில் வளரும் செடிகளும் புற்களும் மற்றப் பிரதேசங்களிலுள்ள செடிகளைக்காட்டிலும் செழிப்பாயும் அடர்த்தியாயும் வளருவதைக் காணலாம்.

உப்புவாயு உள்ள உரங்களை உபயோகிப்பதால் வளர்ச்சி அதிகம் ஏற்படுவது மட்டுமல்ல ; அதனால் வளரும் செடிகொடிகள் மிகவும் சத்துள்ளவைகளாகவுமிருக்கும். பசு, ஆடு இவைகள் அத்தகைய செடி கொடிகளைத் தின்பதாலேயே அதிக சத்துள்ள ஆகாரத்தை அடைகின்றன. அதன் மூலம் நமக்கு அதிக ஆகார சத்துள்ள பால், வெண்ணெய், தயிர், முதலியன கிடைக்கின்றன. நாம் உட்கொள்ளும் காய்கறிகளையும் இவ்வாறு அதிக சத்துள்ளவைகளாய்ச் செய்துகொள்ளலாம்.

உப்புவாயு உள்ள எருக்கள் செடிகொடிகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. மேலும் அதனால் அவைகள் சீக்கிரமும் வளருகின்றன. சாதாரணமாய் இரண்டு மாதத்தில் வளர்ந்து பலன் கொடுக்கும் செடிகள், ஒருமாதம் அல்லது ஒன்றரை மாதத்திலேயே உப்புவாயு உரங்களை உபயோகிப்பதால் பக்குவமாகின்றன.

ஏற்கனவே உலகினில் விளைவு அதிகமாய்விட்டதன் காரணமாய்ஆங்காங்குத் தானியங்கள் குவிந்து கேட்பாரின்றிக் கிடக்கும் காலத்தில் உப்புவாயு உரத்தைப்போட்டு இன்னும் விளைவை அதிகப் படுத்தவேண்டியதன் அவசியம் தான் என்னவென்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் உப்புவாயு செய்யும் உபகாரம் அதிக விளைவு மாத்திரமல்ல ; மேற்கூறியபடி அதிக ஆகார சத்துள்ள செடிகளை உண்டாக்குவது நோக்கற்பாற்று. அத்தகைய உணவுப் பொருள்களை நாம் உபயோகிப்பதால் சரீர புஷ்டி ஏற்பட்டு, அதன் காரணமாகப் பலவீனமாக்கும் இன்புளுயென்ஸா, க்ஷயம் முதலிய வியாதிகளைப் பரவவொட்டாமல் சிறிது தடுக்கலாம்.

இவ்வளவெல்லாம் ரஸாயன தத்துவ சாஸ்திரிகளுக்குத் தெரிந்திருந்தும், சுமார் இருபது வருடங்களுக்கு முன்வரையிலும் செடிகளுக்கு உப்புவாயுவை சேர்த்துக் கொடுக்க, பூமியிலுள்ள பாக்டீரியாவைத் தவிர வேறு வகையில்லாமலிருந்தது வியக்கத் தக்கதே. ஆனால் இப்பொழுதோ மும்முரமான ஆராய்ச்சியின் பயனாய் ஆகாயத்திலுள்ள நாலு பங்கு உப்புவாயுவை உபயோகப்படுத்தி அதன் மூலம் ரஸாயன எருக்களை உண்டாக்க அநேக முறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. அதனால் உலகுக்கே அவசியமாய் வேண்டிய உப்புவாயு உணவைச் சுலபமாய்ச் சம்பாதித்துக் கொடுத்து, முன்னினும் வலிவுபெற்ற ஜந்துக்களை உண்டாக்கச்சாத்தியமாகும். இம்மாதிரி எருக்களை உபயோகிப்பதால் தண்ணீரின்றிப் பாலைவனமாக மாறினவென்று சொல்லப்படும் பிரதேசங்களும் வனப்புமிகப் பெற்றனவாய் மாற்றப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

ஆனால் ஆகாயத்திலிருந்து உப்புவாயுவை எடுத்துக் கொண்டே வந்தால், அதனால் அது குறைந்து கெடுதி விளையாதா வென்ற சந்தேகம் ஏற்படலாம். உலகில் உள்ள உப்புவாயு அளவு கொஞ்ச நஞ்சமல்ல. பல்கோடி வருஷங்கள் நாம் அதை விடாமல் எடுத்து வந்தாலும், அதன் அளவு அதிகம் குறையாது. அப்படிக் குறைந்தாலும் அதனால் கெடுதியுண்டாகாது. ஒரு சமயம் நன்மையே ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஏனெனில் ஆகாயத்திலுள்ள பிராணவாயு கொஞ்சமே யெனினும் அது மிக்க வீரிய முள்ளது. பிராணவாயு சீவராசிகளின் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். இருந்தாலும் நாம் பிராணவாயுவை மாத்திரம் தனியாய்ச் சுவாசித்தால் நெடுநேரம் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. பிராணவாயு வீரியம் அதிகமுள்ளதாதலால் அது தனிமையாயிருந்தால் உடலைக் கொளுத்திப் பொசுக்கிவிடும். எனவே, அதன் வீரியத்தைத் தணித்து மட்டுப்படுத்தவே பகவான் ஆகாயத்தில் நாலு பங்கு உப்புவாயுவையும் ஒருபங்கு பிராண வாயுவையும் சிருஷ்டித்தார் போலும். பிராணவாயுவின் வேகத்தை அது ஒருவாறு சாந்தப்படுத்துகிறது. மேற்கூறியவாறு அது சற்று குறைவதால் பிராணவாயுவின் வீரியம் அதற்கேற்றவாறு சுலபமாய் அதிகப்படும். அத்தகைய காற்றை உட்கொள்வதால் உடம்புக்கே ஒரு வகை அதிக உத்சாகமும் ஏற்படலாம்.

இதுகாறும் நம் நாட்டில் உரவிஷயங்களைக் குறித்துப் போதுமான பிரசாரமும் விளக்கமும் செய்யப் படவில்லை. ஏதோ எருப்போடுவது சகஜமாயிருக்கிறதே ஒழிய, செடிகளின் வளர்ச்சிக்கும் மற்றும் பூமியின் சாரமட்டத்திற்கும் ஏற்றவாறு, உரம் போடவேண்டியதன் அவசியம் முற்றும் புலப்பட்டதாய்த் தெரியவில்லை. இந்த விஷயங்களில் தேர்ச்சிபெற்று நூதன முறைகளைக் கையாளும் திறன் வாய்ந்தோரும் நம் நாட்டில் வெகுசிலரே. பொது ஜனங்களுக்கு இவ்விஷயத்தில் பெரும்பாலும் அசிரத்தையே அதிகமிருக்கிறது. பள்ளியில் படிக்கும் மாணவர்கள் உப்புவாயுவைப் பற்றிப் படிக்கிறார்களே யன்றி, அதன் உபயோகங்களை நன்கறிந்து வெளியில் பிரபலம் செய்வதுமில்லை. இத்தகைய விஷயங்களில் ஆராய்ச்சி செய்வதிலும் சிரத்தை கொள்வதில்லை.

தற்காலத்தில் அநேக உரங்கள் விளம்பரப் படுத்தப் பட்டுவருகின்றன. அவைகள் ஒவ்வொன்றையும் தராதரம் பார்த்து சீர்தூக்கி ஒருவகை அபிப்பிராயம் கொள்ள சிறிதளவு சாஸ்திர ஞானம் வேண்டியது மிகவும் அவசியம். அதனால் நம்மவர் வெறும் படிப்போடு நில்லாமல், இம்மாதிரி நேர் வாழ்க்கையில் உபயோக முள்ள விஷயங்களில் மேன்மேலும் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டும். நூதன முறைகள் என்று ஒரே பேச்சில் நல்ல முறைகளையும் நிராகரித்து விடாமல், ஒவ்வொன்றின் குணத்தையும் பரிசீலனை செய்து நல்லதாயிருப்பின் எடுத்து உபயோகித்துக்கொள்வதுதான் அறிஞரின்குணம். அப்படிச் செய்வதனால் பயன் மிக உண்டு. நாமும் உலகத்தாரால் "பின் தங்கினவர்" என்று கருதப்பட மாட்டோம்.

நிலரென்று கிராமவாசிகளுக்கும் பயிரிடுவோர்க்கும் போதிய சாஸ்திர அப்பியாசம் கிடைப்பது துர்லபமேயாகையால், படித்துக் கற்ற மாணவர்கள் தம் ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் இத்தகைய விஷயங்களைப் பற்றி அவர்களுக்கு எடுத்

துரைத்து, அவைகளைப் பின் பற்றச் செய்யவேண்டும். தேசியத் தொண்டில் இதுவும் முக்கியமான பகுதியாகும். எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பது எளிதில் முடியும்; இத்தகைய விஷயங்களை எடுத்துச் சொல்லி அறிவூட்டுவது மிக்க படிப்பும் ஆர்வமும் உள்ளவர்களுக்கே சாத்தியம். அத்தகையோர் இவ்வகைத் தொண்டில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்வரேல் நம் நாடு சீக்கிரத்தில் க்ஷேமமடையும் என்பதற்கையமில்லை.

# "கண்ணனென்னுங் கருந்தெய்வம்"

[திரு. தி. ர. சாரங்கபாணி, எம். எ.]

அறிவுக்கெட்டாது அருவமாய் அளித்தழிக்கும் முதலுக்கோர் உருவமிட்டு வழிபடல் அறியாமையென, அறியாமையான், அகம்பாவம் மிகுந்து, ஆங்காங்கு அலறியுளறும் அசடர்களுக்கு, அருவமாயிலங்கும் அரியன், அடியார்கள் கருதும் உருவமாகவும் அமைகின்றான் என்னும் பேருண்மையை, கண்ணால் காண்டற்கரிய கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளல் நீத்து அறநெறியோடியைந்த ஒரு வாழ்வை இப்பிறவியில் நடாத்திடின், பேரின்ப வீடாகிய நிர்வாண நிலையை எய்த இயலுமென அன்பு நெறியின் உண்மையை ஒருவாறுணர்ந்த புத்தராகிய புத்தரின் கொள்கையின் அடிப்படையை அறவே மறந்து, அவரையே ஓர் உருவமாகக் கொண்டு, தெய்வமெனப் போற்றி, புலனறிவை நற்றுறைகளில் செலுத்தியடக்குதலே புலனடக்குதல் என்னும் மெய்ம்மையை உய்த்துணரும் ஆற்றலற்று, புலனடக்குதலாவது, இயற்கை இயல்பிற்கும் இறைவனின் கொள்கைக்கும் மாறான, துறவறத்தையே நாடலெனவும், அவ்வறமே நிர்வாணத்திற்குரிய வழியெனவும், இல்லறத் துறைவான் பிறவாத்தன்மையை எய்திடானெனவும் பௌத்தர்கள் கழறிக் கல்லாக்கயவர்களை மயக்கிய சமயத்தில், தமிழகத்தில், கண்ணால் காண்டற்கரிய அக்கடவுளே "பக்திவலையுள் படுவோன்" ஆதலின், அடியார்களுக்கு வந்த உருவாய்த்துலங்கி அருளூட்டுகின்றான் என்னும் பேருண்மையை அங்கைக் கனியென எடுத்துக் காட்டிய தூயர்களில் ஒரு சாராராகிய ஒரு பானிருமை வைணவ சமய குரவர்கள், ஆண்டவன்றன் இன்னருளால் அவனுக்கருளிய அருள்மாலைகளை மலர் மலராக ஆய்ந்துவர, அவர்கள் கண்டாநந்தித்துப் பேருவகை எய்திய பல்லுருவங்களுள் தனியுருவாய்ச் சிறக்க விளங்குவது,

"கண்டுந் தெளிந்துங் கற்றோர்கண்ணற்கா
ளன்றியாவரோ"
—திருவாய் மொழி 7 : 5 : 7.

என நம்மாழ்வார் இறுமாப்புடன் இனிதுறையும்,

"கொந்தார் காயாவின் கொழுமலர்த் திரு
நிறத்த எந்தா"
—திருவாய் மேர்ழி 3 : 2 : 5.

யாகிய,

"கரிய மேனியன் செய்யதாமரைக்கண்ண"
—திருவாய் மொழி 3 : 6 : 5.

னின் திருவுருவே யாகும்.

மேலோதிய பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிரப் பாடல்களில் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் "கண்ணனென்னுங் கருந்தெய்வத்தின்" காட்சியை யாம் அணிவகுக்க,

"ஒவி நல்லார்
எழுதிய தாமரை யன்ன கண்ணும்
ஏந்தெழிலாகமும் தோளும் வாயும்
அழிகியதாம் இவரார் கொல்"
—பெரிய திருமொழி 2 : 8 : 7.

என்று திருமங்கை மன்னருடன் நாமும் அதிசய மூயுறுதற்குரிய ஓர் அழகிய தோற்றம் நம்மகக் கண் முன் னின்று நம்முள்ளத்தைக் கொள்ளை கொள்ளுமென்பது தேற்றம்.

அன்பு நெறியாம் சைவம் வளர்த்த நல்லோர்களாகிய நால்வர்கள் வெவ்வேறு காலங்களில் தோன்றி, சமயம் வளர்த்திடினும், ஓயாத அருள்வேட்டலான் மாறுபாவ அறிக்கையான் கண்ட மங்கைப்பாகனின் திருக்காட்சி ஒரே தன்மைத்தென்பது தேவாரத்தை ஓதுபவர்களுக்குத் தெற்றென விளங்குதல் போலும், வெவ்வேறு காலங்களில் தோன்றிடினும், சைவ நெறியினினும் புறப் பெயர்களான் அல்லான் கொள்கைகளில் மாறுபடா வைணவச் சமயம் வளர்த்த ஆழ்வாராதிகளும் பக்தி நெறி பற்றியும், கர்ம வழியொழுகியும், ஞான நெறி நின்றும் ஓயாதிரந்திரந்து அவனருளான் கண்ட,

"கடல்நிறக் கடவுளெந்தை"
—திருமாலை 19.

யாகிய கண்ணனின் காட்சி ஒன்றிற்கொன்று முரணுகாது இலங்குதல் அவர்களுடைய அருள் மாலைகளை இனிதாராய நனி விளங்கும்.

"அதிருங்கடல் நிறவண்ணனை"
—பெ. திருமொழி 1 : 2 : 9.

"காயமலர் நிறவா கருமுகில் போலுருவா"
—பெ. திருமொழி 1 : 5 : 6.

"காரொக்கும் மேனிக் கரும்பெருங்
கண்ணனே"—பெ. திருமொழி 1 : 8 : 6.

"ஒலிகட லோத நீர்போலே
வண்ண மழகிய நம்பி"
—பெ. திருமொழி 2 : 4 : 7.

"கரியமுகில் புரைமேனி மாயனை"
—பெ. திருமொழி 4 : 1 : 10.

எனப் பெரியாழ்வாரும்,

"கருவுடைவண்ணன் காயாவண்ணன்
கமலவண்ண" —நா. திருமொழி 1 : 6.

"கோலங் கரிய பிரானே"
—நா. திருமொழி 3 : 5.

"கண்ண னென்னுங் கருந்தெய்வம்"
—நா. திருமொழி 13 : 1.

என இளமைப் பருவத்தில் இறைவன் மாட்டுதித்த பக்தி ஆண்டுகள் கழியத் தூய காதலாக மாறி இறுதியில் பிறவாமை எய்திய ஆண்டாளம்மையும்,

"அஞ்சனத்த வண்ணனாய ஆதிதேவன்"
—திருச்சந்த விருத்தம் 43.

"காரொடொத்த மேனிநாங்கள் கண்ண"
திருச்சந்த விருத்தம் 47.

எனத் திருமழிசைபிரானும்.

"கடல்நிறக் கடவு ளெந்தை"
—திருமாலை 19.

"மரகத வுருவும்"—திருமாலை 20.

"கார்த்திரளனைய மேனிக் கண்ணனே"
—திருமாலை 32.

எனத் தொண்டரடிப் பொடியாரும்,

"நீலமேனி ஐயோ நிறை கொண்டதென்
நெஞ்சினையே" —அமலனாதிபிரான் 9.

எனத் திருப்பாணரும்,

"பனிமுகில் வண்ணன்"
—பெரிய திருமொழி 1 : 1 : 6.

"கருங்கடல் முந்நீர் வண்ணனை"
—பெ. திரு. 1 : 1 : 10.

"நீலமுகில் வண்ணன்"—பெ திரு. 2 : 4 : 5.

"இருண்ட அம்புதம் போன்று
இவரார்கொல்" பெ. திரு. 2 : 8 : 3.

"காரணிமேகம் நின்றதொப்பானை"
பெ. திரு. 4 : 3 : 1.

"அஞ்சனக் குன்றம் நின்றதொப்பானை"
—பெ. திரு. 4 : 3 : 7.

"வேலையன்ன கோலமேனி வண்ணன்"
—பெ. திரு. 4 : 8 : 6.

"மைவண்ணம் கருமுகில் போல்திகழ்
வண்ண மரகதத்தின் அவ்வண்ண
வண்ணனை" —பெ. திரு. 5 : 6 : 9.

எனத் திருமங்கை மன்னரும்,

"கருமேனிச் செங்கண்மால"
—முதல் திருவந்தாதி. 19.

எனப் பொய்கையாரும்,

"திறங்கரியன் செய்ய நெடுமால்"
—இ. திருவந்தாதி 52.

எனப் பூதத்தாரும்,

"என்னாழி வண்ணன்"—மூ. திருவந்தாதி 1.

எனப் பேயாரும்,

"முழுநீர் முகில்வண்ணன் கண்ணன்"
—திருவிருத்தம் 2.

"கருகியநீல நன்மேனி வண்ணன்"
—திருவாய்மொழி 1 : 9 : 3.

"சொந்தார் காயாவின் கொழுமலர்த்
திருநிறத் தெந்தாய்"
—திருவாய்மொழி 3 : 2 : 5.

"ஒருகோல நீல நன்னெடுங் குன்றம்
வருவதொப்பான்"
—திருவாய்மொழி 8 : 2 : 10.

என எம்மதத்தினரும் நம் மாழ்வார் என உறவு பாராட்டற்குரிய நம்மாழ்வாரும் கார்வண்ணமே கண்ணனின் ஒளி வண்ணமெனத் தாங்கள் தனித்தனியே மாறு நம்பிக்கையானும், ஓயா பக்தியானும், கலவாபாவ அறிக்கையானும் இரந்திரந்து ஓயாது பாடிப்பாடி கண்ணீர் வெதும்ப வெதும்ப மெய்சிலிர்க்கப் பரவசராய்க் கண்ட உருவ எழிலின் பொது வண்ணத்தை அந்த வண்ணமுடைய இயற்கைப் பொருட்களோடு இயைந்து ஓதியுள்ளார்கள். கண்ணனின் கார்வண்ணம் கருமுகிலைக் காண்டலான் ஒருவன் நுகரும் இன்பத்தையே அளித்திடும் என்பது தேற்றம். கைம்மாறு கருதாது உலகிற் குதவும் கார்மேகம் ஒப்ப ஆக்கல் அளித்தல் அழித்தலெனும் முத்தொழில்களையும் மூவேறுருவாய் நின்று கைம்மாறு கருதாது இயக்கும் பெருந்தகை, கருமுகில்போலும் உருவங்கொண்டிலங்கல் முறையேயாம். காண்டோறுங் காண்டொறும் இன்பம் பயக்கும் கருமுகில் போல் காண்போர்க்குக் "கரியமுகில் புரை மேனிமாயன்" இன்பம் அருளுகின்றான் என்பது கருதியே "கண்ணுக் கினிய கருமுகில் வண்ணன்" எனப் பெரியாழ்வாருங் குறிப்பிடுகின்றார். கார்மேகம் கண்ணுக் கெட்டிய அளவைக் கடந்து பரந்து நிற்றல் போல் கார்முகில் வண்ணனும் எங்கணும் பரந்துளான் என்னும் பெருண்மையையும் அவனுடைய எழில்வண்ணங் குறிக்கின்றது எனக் கூறினும் முரணாகாது.

அத்தகைய "கண்ணுக் கினிய" "காயாமலர் வண்ண"னை வைணவப் பெரியார்கள் இயற்கையில் அவ்வண்ணந் தாங்கிய பொருள்களைக் கண்ணுறுந்தோறும் கண்ணுறுந்தோறும் எண்ணி எண்ணி இசை பாடிப்பாடி ஆநந்தக் கண்ணீர் ஊற்றெனவாய உருகினர் என்பது,

"குன்றுடு கொழு முகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமால்"
—பெ. திருமொழி 4 : 8 : 9.

எனப் பெரியாழ்வாரும்,

"கருவிளை யொண் மலர்காள்!
காயா மலர்காள்! திருமால்
உருவொளி காட்டுகின்றீர்"
—நா. திருமொழி 9 : 3.

"மைம்மொ ழில்வாழ் குயில்காள்!
மயில்காள்! ஒண் கருவிளைகாள்!
வம்பக்களங் கனிகாள்! வண்ணப்
பூவை நறு மலர்காள்!
ஐம் பெரும்பாத கர்காள்
அணி மாலிருஞ் சோலைநின்ற
எப்பெரு மானுடைய நிறம்
உங்களுக் கென் செய்வதே"
—நா. திருமொழி 9 : 4.

என ஆண்டாளம்மையும்,

"மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையுங் காயாவும்போன் றிரு
மெய்யானை" [ண்ட
—பெரிய திருமொழி 11 : 7 : 5.

என மங்கை மன்னனும்,



"கொண்டல்தான் மால்வரைதான்
மாகடல்தான் கூரிருள்தான்
வண்டறாப் பூவைதான்
மற்றுத்தான்—கண்டநாள்
காருருவங் காண்டோறும்
நெஞ்சுஓடும் கண்ணனார்
பேருருவென் றெம்மைப்
பிரிந்து" —பெரிய திருவந்தாதி 49.

என நம்மாழ்வாரும் வியந்துரைத்தல் இனிது போதரும். இயற்கைப் பொருள்கள் மாட்டு இலங்கிய கண்ணனென்னுங் கருந் தெய்வத்தின் வண்ணம் அதனைக் கண்ணுற்ற அன்பர்களுக்கு அவ்வெழிலுடைப் பெம்மானின் நினைவூட்டியதல்லான், "எம்மாண்டவரின் எழில்வண்ண முங்களுக்கெய்திய தெவண்?" என வினவவும் "இறைவனின் எழிலேனும் உங்கள்பால் என்றும் நிலவுகின்றதே அவ்வெழிலுடையான் எங்கள்முன் என்றும் நின்று உருக்காட்டாது ஒளிகின்றனனே" என வருந்தவுந் தூண்டியதெனினும் பொருந்தும்.

"களி நிலா வெழில் மதிபுரை முகமும்"
—பெருமாள் திருமொழி 1 : 4.

எனக் குலசேகரப் பாண்டியரும்,

"திருவுடை முகத்தினில்"
—நா. திருமொழி. 1 : 6.

"கதிர் மதியம் போல் முகத்தான்"
—திருப்பாவை 1.

என ஆண்டாளம்மையாரும் வியந்துரைப்பது 'கார்மேனி' எந்தையின் முகம் முழுமதியின் குளிர்ந்த அருளொளியுடன் நிறைந் திருத்தலுடன் கண்டோர்க்கு அருளாம் இன்பம் பயக்கும் இயல்புடைத் தென்பதையும் வலியுறுத்துகின்றது. கதிர்மதியின் உலகிடை நிலவிய இன்கதிர் ஆங்கு நிறைந்த அந்தகாரத்தை யழிப்ப தொப்ப, ஆணவமல மென்னும் அந்த காரத்தில் ஆழ்ந்த யாம் "கடல் நிறக் கடவுளின்" கதிர் மதியம்போல் முகத்தின் காட்சியைக் காண்டலும் நம்மைப் பிறப்பிறப்பிலாழ்த்தி நிற்கும் ஆணவமல மெனும் பேரிருள் அழியும் என்பதும் ஈண்டு குறிப்பான் காணக்கிடக்கின்றன. காமநோய் வாய்ப்பட்டார்க் கல்லது மற்றோர்க்கு முழுமதியவன் இன்பமூட்டுவ தொப்ப, மறநெறி பொழுகும் மக்களும், கல்லாக் கயவருமல்லான் ஏனைய அன்புடையோர்க்கே இன்னருள் ஒளி வீசும் மதிமுகம் எனக் கொள்ளலும் அமைவுடைத்து. ஈண்டுக் காமங் கதுவப் பட்டார்க்குத் தண்மதி வெறுப்பை யூட்டலான் அன்னார் வெண்ணிலாவைப் பார்க்க விரும்பாதிருத்தற் போலும் அறநெறியையும் அன்புநெறியையும் மறந்தும் அறியா உன்மத்தர் ஆண்டவனின் அருள் ஒளி நிறைந்த எழில்தனத்தைக் காண விரும்புகின்றார்களில்லை என்பதை விளக்குவான் விரும்பியே "கார்த்திரளனைய மேனிக் கண்ணன்" "கதிர்மதி" முகத்துடன் விளங்குகின்றனன் போலும்!

கோலங்கரிய பிரானின் "கதிர்மதி முகத்தினில்" மிளிர்ந்த கண்ணெழிலைக் கண்டு கண்டு பேருவகைக் கொண்ட வைணவப் பெரியார்கள் ஆண்டவரின் திருக்கண்களின் ஒப்பற்ற இயல்பை மனமார, வாயாரப் பண்ணிசைகளான் பாடிப் பாடி அகமகிழ்ந்தார்கள்.

"செங்கண் கருமுகிலே"
—பெ. திருமொழி 1 : 3 : 4.

"பங்கயநீள் நயனத்தஞ்சன மேனியனே".
—பெரிய திருமொழி 1 : 5 : 1

எனப் பெரியாழ்வாரும்,

"கார்மேனிச் செங்கண்"—திருப்பாவை 1.

என ஆண்டாளம்மையும்,

"தூயதாமரைக் கண்களும்"
—திருமாலை 20

எனத் தொண்டரடிப் பொடியாரும்,

"அரங்கத்தம லன்முகத்து
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி நீண்டஅப்
பெரிய வாயகண்கள்"
—அமலனாதிபிரான் 8.

எனத் திருப்பாணரும்,

"ஒவி நல்லார்
எழுதிய தாமரையன்ன கண்ணும்"
—பெரிய திருமொழி 2 ; 8 : 7.

"கார்வண்ணந் திருமேனி கண்ணும் வாயுங்
கைத்தலமு மடியிணையுங் கமல வண்ணம்"
—திருநெடுந்தாண்டகம் 16.

எனத் திருமங்கை மன்னனும்

"கண்ணுங் கமலம்"
—நான்முகன் திருவந்தாதி 9.

எனத் திருமழிசைப் பிரானும்,

"கண்ணுஞ்செந்தாமரை" திருவிருத்தம் 43.

"கண்ணன் கண்ணல்லது இல்லையோர்
கண்ணே" —திருவாய்மொழி 2 : 2 : 1.

"கருகிய நீலமேனிவண்ணன்செந்தாமரைக்
கண்ணன்" —1 : 9 : 3.

"பங்கயக் கண்ண னென்னோ" —3 : 4 : 3.

"தண்பெரு நீர்த்தடந் தாமரை மலர்ந்தா
லொக்குங் கண்பெருங் கண்ணன்"
—9 : 5 : 9.

என நம்மாழ்வாரும் கண்ணனின் செந்தாமரைக் கண்களை இயற்கையோடியைந் தியைந்து புகழ்ந்து புகழ்ந்து மகிழ்வது இதனை வலியுறுத்தும். "கண்ணுக்கினிய மாமுகில்" வண்ணத் திடையில் மிளிருங் "கதிர்மதி" முகத்தில் "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி யோடிநீண்டஅப் பெரிய வாய கண்கள்" ஆறறிவு படைத்து அறநெறியொழுகும் எவ்வுளத்தைக் கொள்ளை கொள்ளாது! ஈடெடுப்பற்ற இறைவனின்கண்ணெழிலன்றே நம்மாழ்வாரையும் "கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" எனக்கூறுமாறு தூண்டியது?

"துவரிதழ்ப்பவளவாயும்"—திருமாலை 20.

எனத் தொண்டரடிப் பொடியரும்,

"வாய் கமலம் போலும்"
—திருநெடுந்தாண்டகம் 21.

என மங்கை மன்னரும்,

"செங்கனிவா யொன்றினோடும்"
—திருவாய்மொழி 5 : 5 : 1.

என நம்மாழ்வாரும் போற்றிப் புகழும் அடியார் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அரியனின் அழகிய வாயன்றே "செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே" (அமலனாதி பிரான் : 7) எனத் திருப்பாணரை வாய்விட்டலறி ஆநந்தத்தில் பித்தேறியவர் போலுங் கண்ணீர் விடுமாறு தூண்டியது.

"வாரமார்ப தன்றோ அடியேனை யாட்
கொண்டதே" —அமலனாதிபிரான் 5.

எனத் திருப்பாணர் புகழ்ந்துரைக்கும் அகன்றுயர்ந்த மார்பினில்,

"வம்பவிழுந் துழாய் மாலை தோள்மேல்"
—9 : 2 : 4.

எனத் திருமங்கை மன்னர் கூறுவதற்கிணங்க "தாது நல்ல தண்ணந்துழாய்" 10 : ? : 1. அலங்கல் மெய் வண்ணமாகிய கார்வண்ணத் தடனியைந்து மனங்கதூவுங் காட்சியன்றோ மெய்யடியாரின் அகங்கொண்டது?

"தண்டொடு சக்கரம் சார்ங்க மேந்துந்
தடக்கையன்" —பெ. திருமொழி 1:4:6.

"அஞ்சுடராழி உன் கையகத் தேந்தும்
அழகா" —3 : 3 : 6.

"நேமிசேர் தடங்கையினனை"—4 : 4 : 5.

எனப் பெரியாழ்வாரும்,

"சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்"
—திருப்பாவை 14.

"பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச
சன்னியமே" —26.

"ஆழியுஞ் சங்கும் ஒண் தண்டும் தங்கிய
கையவன்" —நா. திருமொழி 5 : 7.

என்று ஆண்டாள் அம்மையும்,

"கையி லோர்சங் குடை
மைந்நிறக் கடலைக்கடல் வண்ணனை"
—பெ. திருமொழி 7 ; 10 : 11.

"அடித்தலமுந் தாமரையே அங்கைகளும்
பங்கயமே"—8 : 1 : 5.

"கைவண்ணந் தாமரை வாய்கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியுமஃதே"
—திருநெடுந்தாண்டகம் 21.



"ஒருகை யிற்சங்கு ஒருகை மற்றாழியேந்தி"
—24.

எனத் திருமங்கை மன்னரும்,

"பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்
கண்டேன் என்னாழிவண்ணன் பாலின்று"
—மூன்றாந் திருவந்தாதி 1.

என்று பேயரும்,

"கண்ணுஞ் செந்தாமரை கையும் அவையடி
யோ அவையோ"—திருவிருத்தம் 43.

"மின்னிலங்கும் ஆழிப்படைத் தடக்கை
வீரனை"—திருவாய் மொழி 103.

"சங்கினோடும் நேமி யோடும்"—5 : 5 : 1.

"கருவண்ணம் செய்யவாய் செய்யகண் செய்
யகைசெய்யகால் செரு வொண் சக்கரஞ்
சங்கு அடையாளம்"—7 : 5 ; 7.

"வலக் கையாழி இடக்கைச் சங்கம் இவை
யுடைய மால் வண்ணனை"—6 : 4 : 9.

என நம்மாழ்வாரும் பாடியிருப்பதற்கேற்ப மைவண்ணத்தெந்தையின் கைத்தலங்கள் கமலம் போலும், சிவந்து, சங்கையும் ஆழியையுமேந்தி, கருநீரிடை மலர்ந்ததாமரைப்போலும் இயங்குகின்றன என்பதும், வலக்கரத்தில் "மின்னிலங்குஞ் சுடராழி" கால அளவையையும், இடக்கரத்தில் "வெண் சங்கம்"பிரணவ நாதத்தையுங் குறிப்பாலுணர்த்துகின்றன என்பதும் போதருகின்றன.

"அடித்தலமுந் தாமரையே"—8 : 1 : 5.

"அடியி ணையுங் கமலவண்ணம்"
—திருநெடுந்தாண்டகம் 16.

எனத் திருமங்கை மன்னன் கண்ணனின் அடியிணைகளை வியந்துரைப்பது நோக்கற் குரியது.

"எம் அழகனார்" (4 : 10) என்று மேலோதிய ஆண்டவனின் அருவுருவத்தை யுன்னியுன்னி நினைந்துநினைந்து கண்டு கண்டு மனம் புழுங்கிப் புழுங்கி யின்பக்கடலுளாழ்ந்த ஆண்டாளம்மையார்,

"குழல் அழகர் வாயழகர் கண்ணழகர்"

எனப் புகழ்ந்து புகழ்ந்து "கண்ணனென்னுங் கருந்தெய்வங் காட்சிப் பழகிக் கிடப்பேனை" என வுருகி நைகின்ற ஓர் உருவம் அடியார்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளாது மற்றென் செய்யும்! அப்பெம்மானின் மெய்யன்பர்கள் பாடிய அருட்பாக்களில் ஆங்காங்குச் சிதறி மிளிரும் உருவத் தோற்றத்தின் பகுதிகளை யொருங்கே அணிவகுக்க வெளியுறாஉங் கண்ணனின் காட்சியன்றே.

"களிநிலா வெழில் மதிபுரை முகமுங்
கண்ணனே திண்கை மார்வுந்திண்தோளும்
தளிர்மலர்க் கருங்குழல் பிறையதுவும்
தடங்கொள் தாமரைக்கண்களும்பொலிந்த
இளமை யின்பத்தை"
—பெருமாள் திருமொழி 7 : 4.

என்று குலசேகரப் பாண்டியரையும்,

"மாயனார் திருநன் மார்வும் மரகதவுருவுந்
தோளுந், தூயதாமரைக் கண்களுந் துவ
ரிதழ்ப் பவளவாயும், ஆயசீர் முடியுந்
தேசும் அடியரோர்க் ககலலாமே"
—திருமாலை 20.

என்று தொண்டரடிப் பொடியாரையும்,

"என்னுள்ளங் கவர்ந்தானை, அண்டர்
கோன் அணியரங்கன் என்னமுதினைக்,
கண்டகண் கள்மற் றொன்றினைக் காணாவே"
—அமலனாதிபிரான் 10.

என்று திருப்பாணரையும்,

"சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்க
ளோடுஞ் செங்கனிவா யொன்றினோடுஞ்
செல்கின்ற தென்னெஞ்சமே"—5 : 5 : 1.

என்று நம்மாழ்வாரையும் மெய்ம் மறப்பித்து,

"கருமாணிக்கமலை மேல் மணித்தடந்தாமரைக்
காடுகள் போல், திருமார்வு வாய்கண்கை
உந்திகாலுடையாடைகள் செய்யபிரான்"
—8 : 9 : 1.

எனப் போற்றிப் புகழச் செய்வது பெரியோர்கள் தாங்கள் மாறாத நம்பிக்கையாலும் ஓயாத அருள்வேட்டலாலுங் கலங்காப் பாவ அறிக்கையாலும் ஆண்டவனின் பேரருளாலுங் கண்ணுற்ற ஒரு காட்சியைய நம்மனோ

ரும் உய்த்துணருவான் விரும்பியும், அருவமாயுள்ள ஆண்டவனுக்கு உருவமிடுதல் மடமையென்று மடமையான் மதிமயங்கி மயக்கறுக்க விரும்புவோர்களின் மயக்கை அறுத்து அவர்கள் நாணி அடங்குவான் வேண்டியும் தங்களுடைய அருட்பாக்களின் வாயிலாக நமக்கு ஈந்துள்ளார்கள். மதநுட்பங்களின் உண்மையை யோரும் திறனற்று அறியாமையும், அறிந்து விட்டோமெனும் ஆணவமும், பிடர் பிடித்துந்த போலி நியாயங்களி லாழ்ந்து உண்பதூஉம் உறங்குவதூஉம் சிற்றின்பத்தி லாழ்வதூஉ மல்லான் கண்ணாற் கண்ட காட்சி யளவைக் கடங்கா ஒரு பொருளை நாடுவதும், அப்பொருளைப் பாடுவதும் அப்பொருளை நாடிப் பித்தேறியவர்ப் போலும் பிதற்றியாடுவதும் அறிவிலிகள் ஆநந்தக் கூத்தென எள்ளி நகையாடும் பேரறிஞர்கள், பித்தரெனக் கருதப்படும் அன்பர்களின் அன்புடன் இயைந்தொளிரும் அருட்பாக்களைப் பொருளாய்ந்து ஒரு முறையேனும் ஓதுவரேல் அவர்கள் மெய்மறந்து உண்மையை உய்த்துணருவார்களென்பது திண்ணம். தீங்கரும்பை யுண்டறியா ஒருவன் கரும்பினிடத்துச் சுவையுண்டென உண்டவர்கள் கூறுவது பித்தரின் கூற்றெனக் கழறும் கூற்றும், சமய குரவர்கள் பித்தரென்போரின் கூற்றும் ஒன்றேயாம். ஆண்டவனிடத்து அன்பு நிறைந்து அவனை உருவாய்க் கண்ட பெரியார்கள் காட்டிய நெறியைக் கடைப்பிடித்தொழுகும் ஒருவன் அவர்கள் பெற்ற பேற்றை எய்துதலும் அவர் கண்ட காட்சியை எளிதில் காண்டலும் தேற்றம்.

கண்ணனின் திருவுருவப் படத்தைக் கண்டிரா ஒருவனும், மங்கை பாகனின் ஜோதி வடிவின் ஓவியத்தைப் பாரா ஒருவனும், இயேசு பெம்மானின் ஒளி வடிவத்தின் படத்தைக் கண்டிராத ஒருவனுந் தனித்தனியே அருவமாய், அறிவுக்கெட்டாததாய் எங்கும் பரந்த ஆண்டவனுக்குருவம் இடையாதெனக் கண்மூடி ஓரிடத்தில் தனித்தமர்ந்து தியானிக்குங்கால் அவர்களுடைய அகக்கண் முன் எத்தோற்றந் தோன்றும்? மனதை ஒருவழி நிறுத்தி மனனஞ் செய்தற்குரிய ஓர்உருவத்தையுங் கொள்ளாத அவர்கட்குக் கண்மூடி நிற்கையில் மனக் குரங்கு தலைவிரித்தாடப் பெரும் அந்தகாரமே புலனாகும் என்பது அநுபவ வாயிலாக இனிது புலனாகும். உருவ வழிபாடில்லை எனப் பிதற்றும் கண்மூடித் தியானிக்கையில் அவர்களுடைய அகக்கண் முன் எவ்வுருவந் தோன்றுகின்றது? மக்களின் பாவம் போக்கத் தம் உடல் பொருளாவி மூன்றினையும் ஒருங்கே களிப்புடன் ஒப்பற்ற தியாகஞ் செய்த இரக்ஷகரின் உருவத் தோற்றத்தை ஓவியத்தின் வாயிலாகக் கண்டவர்கள் அவ்வுருவையே—அவ்வாடிய வதனத்தையே—தியானிக்குங்கால் காண்கின்றார்கள். இன்றேல் நீண்ட அங்கியணிந்த அவர்களுடைய ஐயர் உருவேனும் அதுகாலைத் தோன்றிடும். அது உருவ வழிபாடன்றோ? அத்தகைய உருவத்தைக் கொள்ளாதவர்கள் ஒரு சிறு குறிக்கோளேனும் அதுகாலைப் பெறல்வேண்டும். இன்றேல் வெட்டவெளியே ஆங்குப் புலனாவது தேற்றம். அன்பர்கள் கண்மூடி தியானிக்குங்கால் அவர்களுடைய குருவின் உருவாயினும், இன்றேல் அவர்கள் உயிரென மதிக்குந் தெய்வீகப் புத்தக உருவேனும் அவர்கள் கண்முன் தோன்றல் வேண்டும். மனித இயற்கைக்கே ஓர் உருவ உதவியின்றி அருவமாயிருக்கும் ஆண்டவரைப்பற்றிச் சிந்திக்க வியலாது.

மேலும் அருவமா யிருக்கும் அமலனுக்கு உருவமிட்டு வழிபடல் அறியாமையென்னும் பேரறிஞர், எங்கும் நிறைந்த இறைவனுக்கு ஒருருவைவிட்டது யாதென அறிதல்வேண்டும். மேலோதிய உவமைகளினின்றும் போதரும் "கண்ணனென்னுங் கருந்தெய்வத்தின்" உருவம் — அகத்தைக் கொள்ளை கொள்ளும் அழகிய தோற்றம்—அரியின் அன்பர்கள் கண்டாநந்



தித்த தோற்றமல்லான் அன்னார் அவருக்களித்த தோற்றமன்றென்பது வெள்ளிடைமலை.

"நேசமிலாதவர்க்கும் நினையாதவருக்கும்
அரியன்", —9 : 9 : 6.

எனுந் திருமங்கை மன்னனின் மெய்யுரையே இதனை வலியுறுத்தும்.

இனி அப்பெரியார்கள் அத்தகைய எழில் உருவை யாண்டுக் கண்டார்கள்? முதல் நிலையில் அகக்கண்ணால் கண்டாநந்தித்த அத்திருவுருவை அன்னார் இறுதியில் யாண்டுங் கண்டார்கள். இயற்கையிலுஞ் செயற்கையிலும், அன்பர்களிடத்தும், விரோதியர் மாட்டும், தொண்டமானிலும், தொண்டனிலும் மக்களிலும், மாக்களிலும் அவ்வுருவையே அவர்கள் கண்டார்கள். அந்நிலையே இறுதிநிலை எனக் கூறலாகும். இன்ப துன்ப வன்மங் கடந்த அத்தகைய இளங்குழவி நிலையே ஞான—நிலையாகும். அந்நிலை ஜாதிமத பேதங்களுக்கப்பால் தனித்தியங்கும் சமரச நிலையாகும். அப்பெருநிலையை எய்துதற்கு அவர்கட்குத் துணைக் காரணமாக இருந்தது அவர்கள் முதலில் இடையறு பக்தியாற் கண்ட உருவத்தோற்றமே என்பது கூறுமலே விளங்கும்.

"பொய்வண்ணம் மனத்தகற்றிப்
புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை"

பெ. திரு. 5 : 6 : 9.

எவ்வழியான் அணுகவேண்டுமோ அவ்வழியில் நாடல் நீத்து, மனம்போனவாறு புராணக் குப்பைகளை யெல்லாம் மெய்யெனக் கொண்டு, அவைகளுள் ஆழ்ந்து விளங்கும் உயர்ந்த தத்துவங்களை உய்த்துணரும் ஆற்றலற்று, பிதற்றிப் பயனென்?

'காரார்மேனி யெங்கை' யாகிய கண்ணனை யென்னுந்தோறும் அவன் இசைத்து உலகை மயக்குங் குழலையாம் மறக்க வியலாது. "இளமை யின்பம்" என நம்மாழ்வார் பெரிதும் போற்றும் மாறா விளமையையுடைய கண்ணன் குழலிசையின் சிறப்பைப் பெரியாழ்வார்,

"இடவணரை இடத்தோளோடு சாய்த்து
இருகை கூடப்புருவம் நெரிந்தேற
குடவயிறுபட வாய்கடை கூடக்
கோவிந்தன் குழல் கொடூதின போது
மடமயில்களொடு மான்பிணை போல
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ
உடைநெகிழ ஓர்கையால் துகில்பற்றி
ஒல்கியோடரிக்கணோட நின்றனரே"

—3 : 6 : 2.

"கானகம்படி யுலாவி யுலாவிக்
கருஞ்சிறுக்கன் குழலூதினபோது"

—3 : 6 : 4.

"பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்து சூழ்ந்துபடு காடுகிடப்ப
தறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவி பாட்ட
[கில்லாவே."—3 : 6 : 8.

"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்ப
குறுவெயர்ப் புருவங் கூடலிப்பக் [ளிப்ப
கோவிந்தன் குழல் கொடூதினபோது."

—3 : 6 : 8.

"மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லுங் கடைவாய் வழிசோர
இரண்டு பாடுந்துலுங் காப்புடை பெயரா
எழுது சித்திரங்கள்போல நின்றனவே"

—3 ; 6 : 9.

"அவனொருவன் குழலூதின போது
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால்நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவை செய்யுங் குணமே"

—3 : 6 : 10.

என வியந்துரைத்தலையுன்ன அக்குழலின் மாண்பு இனிது புலனாகும். படுகளத்தில் காண்டீவங் கைநழுவ உற்றாருடன் யான் பொருது அவர்களைப் போரில் காய்ந்து நாடாள்வதிலுங் கானுறைந்து காலங்கழிப்பேன் என்று பார்த்தன் சோர்ந்த காலத்தில் அத்தனிக் குழலின் நாதமே ஆங்கு உலகம் புகழும் கீதையாக மலர்ந்தது. நமதுளமாகிய படுகளத்தில் ஆசாபாசங்களுக்

...கும் அறிவுக்கும் போராட்டம் நிகழ்கின்ற காலத்தில் சோர்ந்த அறிவாகிய அர்ச்சுனனுக்கு எங்கும் நிறைந்த இறையாகிய கண்ணன் உள்ளொளியெனுங் குழலோசையாகிய கீதையையருளுகின்றான் என்னும் உண்மையே ஈண்டுக் காணக்கிடக்கின்றது.

தியான நிலையினிறுதியில் செவிபடும் நாதம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு "நான்" "எனது" என்னும் பேதங்களை ஒருங்கே களைந்து மாறா இன்பத்தில் திளைக்குமாறு தூண்டும் ஞான ஒலி குழலின் இன்னொலியேயாம். எண்ணரிய பிறவிகளில் தலையாய பிறவியா யிலங்கும் மானிடப் பிறவியில் விளங்கும் நன்றிது தீதிது எனப் பகுத்தறிவிக்கும் உள்ளொளி குழலின் நுண்ணிய ஒலியேயாகும். பக்தி தியான யோக ஞான நிலைகளில் அவ்வொளி ஓங்காரப் பேரொளியாகப் பரந்து தூய்மையையுந் தாழ்மையையும் அருளி ஆண்டவனிடங் காதலை மூட்டியவனை யாண்டுங் காணுமாறு தூண்டுகின்றது. அது போழ்து ஆணவமல மழிய, கர்மபந்த மொடுங்க, பிறப்பிறப்புமடிய பிறவாத் தன்மையை நாம் எய்துவோம் என்பதற்கையமில்லை.

**கண்ணனென்னுங் கருந்தெய்வத்தின் அழகிய காட்சியைக் காணுங்கள்; அவனுடைய குழலோசையைக் கேளுங்கள்;** கர்ம பந்தம் மீளுங்கள்.

"சங்கினொடும் நேமியோடுந் தாமரைக்
கண்களொடுஞ் செங்கனிவா யொன்றி
னோடுஞ் செல்கின்ற தென்னெஞ்சமே"

என்று நம்மாழ்வாருடன் நாமும் இது மாந்தறைய இறைவன் இன்னருள் புரிக; புற வேடங்களும் ஜாதிமத பேதங்களும் அழிந்தொழிக; அன்பு நெறியும் இன்பவாழ்வும் வளம்பெறுக; **சமரசமும் சன்மார்க்கமும் எங்கும் ஓங்க ஆண்டவன் அருள்புரிக.**

# திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்

[திரு. பொன்னம்மாள், பி. ஏ., எல். டி.]

II

இவ்வாறு தன்னைத் தியாகம் செய்தேனும் அன்பரைப் பிறவித் துன்பம், காலனது கடும்பயம் இவற்றினின்று கரையேற்றித் தம்மோடு மோட்ச வீட்டிற்சேர்க்கத் திருவுளங்கொண்ட இறைவனது அன்பின் பெருக்கை விளக்க வந்த கதையின் பொருளை யுணராது, இன்றும் அக்கதையை அப்படியேநடைபெற்ற சம்பவமாகக் கருதுவாருமுளர். இவ்வாறே இறைவனது திருக்குணங்களையும், அவர் ஆத்துமாக்களைப் பாவத்தினின்று மீட்டுப் பரம வீட்டிற் சேர்க்கும்படி எடுத்துக்கொண்ட பல வழிகளையும், மோட்சம் நரகம் என்பவற்றைப்பற்றிய உண்மைகளையும் உணர்த்துவதற்காக வரையப்பட்டுள்ள கதைகளைப் பெரும்பாலர் பொருளையுணராது, சம்பவங்களை உண்மையில் நிகழ்ந்தனவாகவே கொண்டு வருகின்றனர்.

அன்றியும் கடவுளைப் பற்றிய பல கதைகளில் பாவமானிடத் தன்மையனவான விபசாரம், களவு, பொய், பொறாமை, பகை, கர்வம் முதலிய தீக்குணங்களை, 'சுத்த பரிபூரண ஜோதிமயானந்தன்', 'சத்தியவித்து' 'சகல சற்குணக்கனன்' என்று பலவாறுகச் சிறப்பித்து நம் பெரியோரால் போற்றிப் புகழப்படும் இறைவனாகிய முதல்வன்மேற் சாற்றிக் கூறும் பாகங்களுமுண்டு. இக்கதைகளைக் கேட்கும் தற்கால இளைஞரும், உண்மை விளம்புவோரும், அவை இக்கால அறிவுக்கும், உயரியநாகரிகத்திற்கும் சிறிதும் ஒவ்வாமலும், இயற்கைக்குச் சிறிதும் பொருந்



தாமலுமிருப்பது கண்டு, அவைகளின் பொருளைப் பிரித்தெடுக்கும் ஆற்றலற்றவராய்க் கடவுளையும் அவர் உறையும் கோயிலையும் 'சீசீ' என்றிகழ்ந்து அருவருத்து, அவை உபயோகமற்றவையென முற்றிலும் புறக்கணிக்க முயலுகின்றனர்.

ஆகலின் அன்னோருக்கு ஆலய வழிபாட்டின் சிறப்பினையுணர்த்தி, ஆலயங்களை ஒழுக்கத்துக்குரிய சீரிய இடமாக்க வேண்டின், முதன் முதல் அவ்விடங்களில் கோயில் கொள்ளும் கடவுளரை ஒழுக்கத்திற் சீரியராகக் காண்டல் அவசியம். ஆம்.

"ஒழுக்கம் விழுப்பம் தாலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற தெய்வநாயனார் கூற்றின் உண்மையையும், சிறப்பையும் நன்றாய்ந்துகடைப்பிடித்தொழுக முன் வந்திருக்கும் நம் அறிவும் ஆற்றலுமுடைய இளைஞர் பலரும்,

"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"

என்று கூறும் சிவஞான போதத்தின் திருக்கட்டளையைச் சிரமேற் கொண்டு ஒழுக விரும்பும் அறிவுடையார் யாவரும், கடவுளுடைய 'திருவிளையாடலாகக் கூறப்பெற்றுள்ள புராணக் கதைகளை நன்காராய்ந்து, அவைகளிற் காணப்படும் அசங்கிதமான கதைகளை அறவே வீக்கல் வேண்டும். அன்றியும் அக்கதைகளில் பலவற்றிலும் பொதிந்து கிடக்கும் உள்ளுறைப் பொருள்களாகிய உயர்ந்த தத்துவப் பொருள்களையும், உண்மையினையும் வெளிப்படுத்தி அவற்றைச் சில ஒழுக்கத்திற்கும், சிறந்த மானிடத்தன்மைக்கும், பரம இறைவனின் பரிசுத்த இலட்சணங்களுக்கும் ஒரு சிறிதேனும் இழுக்கும் ஈனமும் உண்டாகாவாறு சுத்தமான அழகிய முறையில் பொறிக்க வேண்டும். முதலைத் திருத்தின் முழுதும் திருந்துமன்றோ!

இரண்டாவதாக நம் பாரத நாட்டின்களும்-விசேஷமாய், நந்தமிழ்த் தாயகமாகிய தென்னிந்தியாவிலும் - கணக்கற்றனவாய் மல்கிக் கிடக்கும் உருவ வழிபாடுகளும், நம் இளைஞராலும் தற்கால நாகரிகத்திலும், நல்லறிவிலும் தேறினோர்முதலியோராலும் கோயில்களையும் அதற்கான பணியையும் நிராகரிக்கப் பண்ணுகின்றன. உருவ வழிபாடு தேவையெனவும், அதனாற் பயனுண்டெனவும்கூறித்தம் கூற்றினைநிலைநிறுத்தப் பற்பல சாக்குப் போக்குகளையுரைத்து நிற்கும் பெரியோர் யாரானுமிருப்பின் இருக்கட்டும். அவர் கூறும் காரணம் பலவா யிருப்பினு மிருக்கட்டும். ஆயினும் நம் சொற்ப அநுபவத்தில் கண்ட அற்ப அறிவைக் கொண்டு இங்குச் சிலவார்த்தை கூற அன்பர் இடங்கொடுக்க வேண்டுகின்றோம்.

உருவ வழிபாட்டினிமித்தமே நம் பாரதகண்டம் சகல உரிமையையும் இழந்து தவிக்கின்றது என்ற எண்ணம், யாம் பிற மதத்தினரின் தேச சரித்திரத்தை ஆராயுந் தோறும் உதிக்கின்றது. யாம் சில வருடங்களாக ஆராய்ந்து வரும் யூத சரித்திரத்திற் கண்டதையே இங்குக் கூறப்புகுகிறோம். இச்சாதியார் உலகிலுள்ள பெரும்பாலான சாதிகளைக் காட்டிலும் ஜனத்தொகையில் மிகச் சுருங்கியவரும், உலகின் பல பக்கத்திலும் நிலவும் மக்கள் பலரால் பலவாறு துன்புறுத்தப்பட்டு, உலகெங்கணும் சிதறித் திரிபவருமானவர் என்பதை அவர்தஞ் சரித்திரத்தினின்றும் தெரிந்து கொள்ளலாகும். இப்பகுதியாரே, உலகிலுள்ள மற்றெல்லா மதத்தினருடையகோட்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மாறாக எங்கும் வியாபகமாயிருக்கும் எல்லையில் குணத்தானும் ஏகவஸ்துவுமாகிய இறைவனை யாதொரு உருவ வழிபாடுமின்றி வழுத்த முதலிலிருந்தே போதிக்கப் பட்டனர் என்பது அவரது வேத சாஸ்திரங்களிலிருந்தும், தேச சரித்திரத்தினின்றும் தெளிவாகின்றது. "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டா யிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகி

லும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வேண்டாம்.'' "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலேயும், பொன்னினாலேயும் உங்களுக்குத் தெய்வத்தை உண்டாக்க வேண்டாம்.'' "மண்ணினாலே பலி பீடத்தையுண்டாக்கி உன் பலிகளைச் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்''--யாத்திரையாகமம் 20 : 4, 23, 24. "நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில் நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும் உன் விரோதிகளுக்கு விரோதியாயுமிருப்பேன்....நீ விக்கிரக வணக்கஞ் செய்பவருடைய தேவர்களைச் சேவியாமல் உன் தேவனாகிய கர்த்தனையே சேவிக்கக் கடவாய்....அப்போது அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்'' "வியாதியை உன்னிலிருந்துவிலக்குவேன். கர்ப்பம் விழுந்து போகிறதும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. உன் ஆயுசு நாளைப் பூரணப்படுத்துவேன்.......உன் சத்துருக்களை எல்லாம் முதுகுகாட்டப் பண்ணுவேன்....நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய்...நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால் அது உனக்குக் கண்ணியாயிருக்கும்"—யாத்திரையாகமம் 23 : 33. மேலே கூறிய வேதக்கட்டளை அந்த யூதராகிய இஸ்ரவேலருக்குக் கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன் மோசேயைக் கொண்டு ஏகோவாவாகிய இறைவன் அளித்ததாக அவரின் வேதாகமம் புகலா நிற்கின்றது.

இந்த ஜனம் இறைவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாது மீறித்தாங்கள் சிதறிப்போன தேசங்களிலுள்ள அன்னியரின் விக்கிரக வணக்கத்தைக் கையாடிய பொழுதெல்லாம் "அவர்களைக் கர்த்தர் உபாதித்தார்'' —யாத்திரை 32 : 34-35, என்று கூறுகிறது. அன்றியும் அந்த விக்ரக வணக்கத்தினிமித்தமே யூதர்கள் 70 வருடமாகப்பாபிலோனிய அரசனால் அடிமைப் படுத்தப் பட்டனர் என்றும், பலவித ஆபத்துக்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள் என்றும் அவர்களுடைய தேசசரித்திரம் சொல்கிறது. இறைவனைவிட்டுப் பலவித உருவங்களைத் தெய்வங்களாக வணங்குவோர் தேசத்தில் "பட்டயம் பொய்களைப் பிணைக்கிறவர்கள் மேல்வரும்; ஜனங்கள் பயித்தியக்காரராவார்கள் .... பராக்கிரம சாலிகள் கலங்குவார்கள்....அவர்கள் பேடிகளாவார்கள் ...பொக்கிஷங்கள் கொள்ளையாகும்'' "வறட்சி அதன் தண்ணீர்கள் மேல்வரும். அது விக்கிரகதேசம்'' "அருக்களிப்பான சிலைகளின் மேல் மனமயங்கி யிருக்கிறார்கள் "—எரேமியா 50 : 37-38. என்று பல முறை எச்சரிப்பின் சத்தம் தொனிக்கிறது. இது போன்ற பல பயங்கரமான நிகழ்ச்சிகளைக் கூறியதுமல்லாமல் தாம் கூறியபடியே யூதருக்குள்ளே செய்தும் முடித்தார் என்ற எதிர்மறுக்கக் கூடாத சத்தியம் அவரது சரித்திரவாயிலாக அறியப்படுகின்றது. நயத்தினாலும் பயத்தினாலும் உருவ வழிபாட்டின் தீமையை எடுத்துப் பலமுறை இறைவன் போதிக்கிறான். "தோப்பு விக்கிரகங்களும் சிலைகளும் இனி நிற்காதபடி அவைகளின் பலிபீடங்களின் கல்லுகளெல்லாம் நொறுக்கப்பட்ட சுண்ணாம்புக் கல்லுகளாக்கி விடும்போது அவர்கள் பாவத்தை அவர் அகற்றுவார்.'' —ஏசாயா 27 : 9. என்று அவர்களின் வேதம் அடிக்கடி வற்புறுத்தா நின்றது.

தமது சத்தத்திற்கு மாறாக விக்கிரகங்களிடம் தங்கள் கண்களை ஏறெடுத்தோரான தமது அறிவில்லாப் பிள்ளைகளைப் பார்த்து இரங்கி அங்கலாய்க்கிறார். "நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன். அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். என் ஜனமோ என்னை அறியாமலும் என் கட்டளையை உணராமலுமிருக்கிறது.'' —ஏசாயி 1 : 2 - 3. "காட்டு மிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும். என்னைக் கனம்பண்ணும்; ஆனாலும், யாக்கோபோ என்னைக் கனம் பண்ணாமல் தன் பாவத்தால் என்னைச் சங்கடப் படுத்தினது'' —ஏசாயா 43: 20 - 24.'' எங்கேயாவது இப்படிப்பட்ட காரிய முண்டோ! என் ஜனங்கள் வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்களே! அதனாலன்றோ இஸ்ரவேல் ஒருவேலைக்காரனானான்; அவன் வீட்டிற் பிறந்த ஒரு அடிமையைப் போலானாகிக் கொள்ளையானான்; பலத்த சத்துருக்கள் அவன் தேசத்தைப் பாழாக்கி அவன் உச்சந் தலையை நொறுக்கினார்கள்.... பூர்வகால முதல் நான் உன்னோடிருந்து உன் கட்டுகளை அறுத்தேன். நான் இனி அடிமைப்படமாட்டான் என்று நீயும் சொன்னாயே. ஆகிலும் உயரமான சகல மேட்டின் மேலும் பச்சையான சகல மரத்தின் கீழும் (உன் விக்கிரகங்களினிமித்தம்) நீ வேசியாய்த் திரிகிறாய். அதனாலல்லவோ இந்தத் தீங்குகளை யெல்லாம் உனக்கு நேரிடப் பண்ணினாய். இப்போதும் உன் ஆபத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதென்ன? நீ உனக்கு உண்டு பண்ணின தேவர்கள் எங்கே? உன் ஆபத்துக்காலத்தில் உன்னை ரட்சிக்கக் கூடுமானால் அவைகள் எழும்பட்டும்.''-எரேமியா 2-ம் அதிகாரம்; "உன் அக்கிரமங்களே உன் பூமியின் பலனைக் கெடுத்து உன் பாவங்களே உனக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது''-எரேமியா 5 : 28, "என் ஜனமே என் ஆத்துமா உன்னைவிட்டுப் பிரியாதபடிக்கும் நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசம் ஆக்காதபடிக்கும் என் புத்தியைக் கேள்....நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நட; அப்பொழுது உன் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' —எரேமியா 6 : 8 - 16.

இவ்வாறெல்லாம் இரங்கித் தன் ஜனத்திற்காகப் பரிதபித்து அவர்களை உண்மை நெறியிலும், உன்னத பதவியிலும் நடத்த அன்பு காட்டி யழைக்கும் அருமைப் பிதாவை விட்டு முற்று முடிய விக்கிரகத்தைப் பணிந்த சிலரைப் பார்த்தே இறைவன் "இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்''— "ஆகிலும் நான் என் வைராக்கியத்திலே எழும்பி நியாயந் தீர்க்கிற நாளில் கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார். விக்கிரங்கள் கட்டோடே ஒழிந்து போம். பூமியைத் தத்தளிக்கப் பண்ணக் கர்த்தர் எழும்பும்போது அவருடைய பயங்கரத்திற்கும், மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி மலைகளின் கெபிகளிலும் பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்ளுவார்கள்....மனுஷன் பணிந்து கொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் விக்கிரகங்களை மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சல்களுக்கும் எறிந்து விடுவான். ஏசாயா 2 : 17 - 21. "அப்போது வாலிபரை அவர்களுக்கு அதிபதிகளாகத் தருவேன். பிள்ளைகள் அவர்களை ஆளுவார்கள். அயலானுக்கு அயலான் விரோதமா யிருப்பார்கள். வாலிபன் முதிர் வயதுள்ளவனுக்கும், கீழ்மகன் மேன்மகனுக்கும் இடும்பு செய்வான். .........ஸ்திரீகள் அவர்களை ஆளுவார்கள்.......அந்நாட்களில் கர்த்தர் அவர்களுடைய ஆபரணங்களையும் அலங்கார வஸ்திரங்களையும் உரிந்து போடுவார்.... அப்போது கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச் சுருளுக்குப் பதிலாக மொட்டையும், ஆடம்பரமான வஸ்திரத்துக்குப் பதிலாக இரட்டுக் கச்சும், அழகுக்குப் பதிலாகச் சுருங்கிப் போதலுமிருக்கும்'' —ஏசாயா 3-ம் அதிகாரம்; "கர்த்தர் வேகமான மேகத்தின்மேலேறி எகிப்துக்கு வருவார். அப்போது அத்தேசத்தின் விக்கிரகம் அவருக்கு முன்பாகக் குலுங்கும். அதன் ஜனத்தின் இருதயம் கரைந்து போகும். சகோதரனோடே சகோதரனும், சிநேகிதனோடே சிநேகிதனும், பட்டணத்தோடே பட்டணமும், ராஜியத்தோடே ராஜியமும், யுத்தங் கலக்கப் பண்ணுவேன். அப்போது அவர்களைக் கடின

மான அதிபதியின் கையில் ஒப்புக் கொடுப்பேன். கொடுமையான ராஜா அவர்களை ஆளுவான் —எசாயா 15 : 1 - 4. "அக்காலத்திலே மனிதன் தன் கைகளின் கிரியையாகிய பீடங்களை நோக்காமலும், தன் விரல்கள் உண்டு பண்ணின தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் நோக்காமலும் தன்னை உண்டாக்கின வரையே நோக்குவான். அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக் கொண்டிருக்கும்."—எசாயா 17 : 7-8. என்று உறுதிகூறினர். இவ்வசனங்களில் காட்டப்பட்ட தீர்க்கதரிசனம் திரிகால ஞானியாகிய எசாயா என்னும் பக்தனால் கி. மு. 760-ம் ஆண்டுகளுக்கு முன்னறிவிக்கப் பட்டது. இதை வாசிக்கும் உண்மை விளம்புவோரே இதிற்கண்ட சம்பவங்கள் தற்காலம் நம்மைச் சுற்றிலும் நடைபெறுவதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவுற நோக்கிச் சிந்திப்பாராக.

# பிறர் நம்மைக் கண்டவிதம்

## மார்க்கோபோலோ யாத்திரை

[திரு. சோமசுந்தர தேசிகர்]

I

**மா**ர்க்கோபோலோ என்பவர் இத்தாலிதேசத்தில் வெனிஷியா நாட்டிலுள்ள வெனிஸ்நகரத்தில் ஒருயர் குடியில் 1254-ம் ஆண்டு பிறந்தவர். இவருக்கு ஒரு சகோதரனுண்டு. இவரது பிதாவும் சிற்றப்பனும் கி. பி. 1260-ல் ஊரைவிட்டுப் பயணமாகி கான்ஸ்டாண்டிநோபிள் சென்று அங்கிருந்து வாணிபத்தின் பொருட்டுக் கிழக்கே வெகுதூரஞ் சென்றனர். முடிவாக அவர்கள் சீனதேசஞ் சென்று அங்காண்ட குப்லேகான் என்ற அரசனைக் காண, அவனால் சன்மானிக்கப் பட்டனர். அவன் விருப்பப்படி ஐரோப்பாவிலுள்ள போப் என்றகிறிஸ்தவமத குருவுக்குத் தூது ஒன்றை அழைத்துக் கொண்டு 1269-ல் மீண்டனர். அதுபொழுது மத குருவாயிருந்த பாப்பானவர் (Pope) இறந்து போனதால் அவர் பதவிக்கு மற்றொருவர் தெரிந்தெடுக்கப்படவில்லை. இத்தேர்ச்சி வெகுநாள் தாமதித்தது. வெனீஷியர் சீன சக்கரவர்த்தியினது கோபத்துக் கஞ்சி மறுபடியும் சீனவுக்குப் பயணமாயினர். சிறிது தூரம் சென்றவுடன் ஸ்காண்டருன் குடாவிலுள்ள அயாஸ்நகர் சென்றவுடன் இவர்களிடம் அனுதாபமுடைய டெடால்டோ சாமியார் பாப்பாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டுத் தூதுகோஷ்டியினருடன் திரும்பிவந்து பாப்பைக்கண்டு, அவர் கட்டளைப்படி இருபாதிரிமாரையழைத்துக்கொண்டு முடிவாக 1271-ம் ஆண்டு நவம்பரிற் சென்றனர். அவர்கள் சிறிது தூரஞ் சென்றவுடன் பாதிரிமாரிருவரும் பயத்தினால் திரும்பிவிட்டனர். இவர்கள் போகும்போது பதினைந்து வயதாக விருந்த மார்க்கோவையும் அழைத்துச் சென்றனர். அங்கிருந்து புறப்பட்டுப் பாமிர் பீடபூமி, துருக்கிஸ்தான முதலியவைகளைக் கடந்து சீன சென்று 1275-ம் ஆண்டு மேமாதம் சீனசக்கரவர்த்தியைப் பேட்டி கண்டனர். அதுமுதல் அந்நாட்டிலேயே வசிப்பாராயினர்.

மார்க்கோபோலோ இளமையும் தீவிர புத்தியுமுடையவனாகையால் அந்நாட்டு பாஷையை மிக எளிதில் கற்றதோடு சக்கரவர்த்தியின் தயவையும் பெற்றான். பின்னர் சக்கரவர்த்தியின் உத்தியோகஸ்தரில் ஒருவனாகிப் பல இடங்களுக்குஞ் செல்லுந் தூது கோஷ்டிகளோடு சென்று நாளடைவில் அதன் தலைமையையும் வகித்தான். இவ்வாறு வந்த தூது கோஷ்டிகளில் இந்தியநாடு வந்து நாடுமுழுவதுஞ் சுற்றித் திரும்பியது முண்டு. இவர்கள் பிறந்த நாடான ஐரோப்பா செல்ல பலமுறை முயன்றும் பயன்படாமற் போயிற்று.





அந்நாளில் பாரசீகத்தை யாண்ட அர்குன்கா னென்ற மன்னன் சீன சக்கரவர்த்தியின் உறவினன். அவன் தன்னுடைய மனைவியை யிழந்தான். மறுமுறை சீனவி லிருந்தே விவாகஞ் செய்துகொள்ள விரும்பிச் சக்கரவர்த்திக்குத் தெரிவித்துக்கொண்டான். அங்கிருந்து ஒரு பெண்ணனுப்பப்பட்டாள். அப்பொழுதுதான் மார்க்கோவும் இந்தியப் பயணஞ் சென்று திரும்பி யிருந்தான். இதனை யறிந்த பாரசீகத் தூதர் சக்காவர்த்தியிடம் இவர்களை வழிகாட்டஉதவும்படிவேண்டினர். அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் ஒப்புவிக்க மார்க்கோபோலாவும் அவனது தகப்பன்மாரும் அனுப்பப்பட்டனர். அது சமயம் அவர்களும் மணப்பெண்ணைக் கொண்டுபோய் ஒப்புவித்த பின்னர் ஜன்மதேசம் செல்ல உத்திரவு பெற்றனர். சீனவி லிருந்து கி. பி. 1292-ல் புறப்பட்டு, சுமத்ரா சாவா வழியாக நாகைப்பட்டினம் வந்து சேர்ந்தனர். அக்காலத்தில் சாவகத்தி லிருந்து வருபவர்களெல்லாம் நாகைப் பட்டினத் துறைக்கே வருவது வழக்கம். அங்கிருந்து புறப்பட்டுக் கரையோரமாக மலையாளக்கரை சென்று அங்கிருந்து பாரசீகம் சென்றனர். இந்தப் பயணம் முடிய மொத்தத்தில் இருபத்தாறுமாதங்கள் சென்றன. பாரசீகத்தில் ஓராண்டு தங்கிப் பின்னர் அரசகுமாரியிடம் விடைபெற்றுக் கொண்டு தகப்பன்மாரும் பிள்ளையும் 1295-ல் பிறந்த நாடு சென்றனர். இவர்கள் சீனவில் சம்பாதித்த திரவியம் ஏராளமானவை. இவற்றைக் கொண்டு பெரிய மாளிகை கட்டி நீண்டநாள் வாழ்ந்தனர்.

மார்க்கோ போலோ சீன முதலான விடங்களில் தான் கண்டவற்றைக் கி. பி. 1298-ல் ஒரு புத்தகமாக எழுதினர். அது பல ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ஸர் ஹென்றி யூல் என்ற பெரியார் மிகப் பாடுபட்டு மொழி பெயர்த்துள்ளார். தமிழ் மொழியிலே அவ்வாறொன்றிருப்பதாகத் தமிழ் மக்கள் அறிந்திருப்பது அருமை. நம்மைப் பற்றி அயல்நாட்டார் எவ்வாறு கண்டனர் என்பதை யூல் மொழி பெயர்ப்பை யொட்டித் தமிழ்நாடு சம்பந்தப்பட்டவரை தமிழர்க்கு உபயோகமாகும் பொருட்டு மொழிபெயர்க்கப்பட்டுளது. ஆங்கிலத்தில் எழுதிய அப்பெரியார்க்குத் தமிழகம் நன்றி செலுத்துங் கடப்பாடுடையது. மார்க்கோபோலோ தான் வெனிஸை விட்டுப் பயணப்பட்டது முதல் சீனதேசம் சென்று அங்கிருந்து திரும்பியபடி சீன, ஜப்பான் சுமத்ரா, ஜாவா, நக்கவரம், அந்தமான், இலங்கை, இந்தியா, பாரசீகம் என்ற வரிசையில் எழுதியுள்ளார். நான் தமிழகத்தை முதலிற் குறித்துப் பின்னர் இலங்கை அந்தமான் தீவுகளைக் குறித்துள்ளேன். இச்சிறு மாறுதலைப் பெரியார் பொறுப்பாராக.

### மாபார்[1] என்ற பேரிந்தியா

சிலோன் தீவைவிட்டுப் பயணமாகி அறுபது கட்டையளவு மேல்புறமாகச் சென்றால் பேரிந்தியா என்று பேருடைய மாபாரை யடைவோம். இந்திய தீவுகளிலெல்லாம் [2]இது மேலானது; பூமியோடு சேர்ந்தது. இந்த மாகாணத்தில் சகோதரர்களான ஐந்து அரசர் அரசாளுகின்றனர். ஒவ்வொருவரையுங் குறித்து வரிசையாகக் கூறுவேன்: உலகிலேயே இந்நாடுதான் நேர்த்தியும் பெருமையுமுடைய நாடு. இந்தக்கோடியில் அந்த ஐந்து சகோதரருள் ஒரு

[1]முற்காலத்தில் யாத்திரை செய்த மேல்நாட்டு யாத்திரிகரனைவரும் இந்தியாவின் தென்பாகத்தை மாபார் (Mabar) என்று கூறுவது வழக்கம்.

[2]இந்தியா முதல் சுமத்ரா ஜாவா வரையிலுள்ள தீவுகளை இன்டீஸ் (Indies) என்ற பேரா லழைத்தனர்.

முடிமன்னன் அரசாளுகிறான். அவன் பெயர் சுந்தரபாண்டிய தேவன்[1]. அவனுடைய நாட்டில் நாணயமான முத்துக்கள் ஏராளமாக அகப்படுகின்றன; அவைகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றனவென்று கூறுவேன்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடுவில் கடல் குடாவாக [2]ஓடுகிறது. இந்தக் குடா முழுவதும் கடல் பத்து முதல் பன்னிரண்டு ஆள் புருஷந்தான் ஆழமாக விருக்கிறது; சிலவிடங்களில் மேடாய் இரண்டாள் புருஷமிருக்கும். முத்துச் சலாபம் குளிக்கிறவர்கள் ஏப்பிரல் முதல் மே மாத[3] நடுநாள் வரையிற்றங்கிப் பெரிதும் சிறிதுமாகிய கப்பல்களை அங்குக் கொண்டு செல்கின்றனர். பெட்டலர்[4] (Betteller) என்ற ஊருக்குச் சென்று தங்கி, அங்கிருந்து புறப்பட்டு அறுபது கட்டை குடாவிற் செல்லுகின்றனர். சலாபம் குளிக்குமிடத்தில் நங்கூரம் பாய்ச்சி பெரிய கப்பலிலிருந்து சிறு கப்பலுக்கு மாறுகின்றனர். சலாபம் குளிக்கச் செல்லும் வணிகர் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து ஏப்பிரல் மாத முதல் மே மாத நடுநாள் வரைச் சலாபம் குளிக்கக் கூலிபேசி ஆட்களை யமர்த்திக்கொள்ள வேண்டும். மொத்த வருமானத்தில் பத்திலொன்று[5] அரசனுக்கு அரசிறையாகச் செலுத்த வேண்டும்.

மீன்கள் சலாபங் குளிக்குமாட்களைத் துன்புறுத்தாதபடி மந்திர செபஞ் செய்யுங் கடல் கட்டிகட்கு[6] இருபதிலொரு பங்கு [illegible] வேண்டும். இந்தக் கடல் கட்டி[illegible] அபிரேயமன் (Abraiaman) [illegible] வழங்குகிறது. இவர்கள் [illegible]பொழுதைக்கு மட்டும் மந்திரத்[illegible] கட்டுகின்றனர். இரவ[illegible] இஷ்டப்படி துன்பஞ்செய[illegible] கட்டவிழ்த்து விடுகின்ற[illegible] அபிரேயமன்னர் விலங்கு[illegible] முதலான உயிர் வாழும் பிரா[illegible] மந்திரத்தாற் கட்டவல்[illegible].[1] [illegible]யாட்கள் கப்பலிலிருந்து ப[illegible] வந்தவுடன் கடலிற் குதித்து[illegible] முதல் பன்னிரண்டு பு[illegible] முழ்கித் தங்களாலான [illegible] சாறுக்கும் வரையில் [illegible]றனர். அங்கே முத்துச் [illegible] கண்டு இடுப்பில் கட்டி[illegible] வலையிற் போட்டுக்[illegible] வந்து போட்டுவிட்டு ம[illegible] முழ்குகின்றனர். அவர்க[illegible] தாங்கும் வரையிற் கீழே [illegible]றனர்; தாங்காதபோது மேல்[illegible] களைப்பாறி மறு முறை [illegible]; இவ்வாறு நாள் முழுதும் [illegible]. சிப்பிகள் பார்வைக்கு நத்தை[illegible]யிருக்கின்றன; இந்தச் சி[illegible] சிறிதும் பெரிதுமான மு[illegible] சதையோடு ஒட்டிக் கொண்டு [illegible]ன்றன. இவ்விதமாகப் [illegible] முத்துச் சலாபம் குளி[illegible]; உலக முழுதும் பாவி[illegible] முத்துக்கள் முழுமையும் இங்கிருந்தே வருகின்றன என்பதுண்மை. அந்நாட்டு அரசனது வருமானம் முத்துக்களினின்றும் ஏராளமென்று நான் சொல்வேன்.

மேமாத மத்தியம் கழிந்ததும் முத்துச் சிப்பிகள் அங்கு காணப்படுவதில்லை. முந்நூறு கட்டை கப்பால் அவை காணப்படுகின்றன வென்பதுண்மை.[2] அவ்விடத்தில் செப்டம்பர்

[1]போலே 1293 வாக்கில் பாண்டிய நாடு வந்தான். அப்பொழுது ஆண்ட பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனாக விருக்க வேண்டும். இவன் கி. பி. 1253-ல் பட்டத்துக்கு வந்தான்.

[2]இதனை மன்னார்குடா என்பர்.

[3]சித்திரை மாத முதல் வைகாசி மத்தி வரை.

[4]பட்டலம் என்ற ஊராகக் கருதுகின்றனர்.

[5]முத்துச் சிப்பிகளை யெடுத்து வந்து எடுத்த முத்தில்பத்திலொன்று அரசிறையாகும்.

[6]மீன்கள் வாயைக் கட்டுபவருக்கு கடல் கட்டி யென்று பெயர்.

[1]நாய்களை வாய் கட்டுவது நாம் கண்கூடாகக் காணுஞ் செய்தி.

[2]இது பாக்ஸ் ஜலசந்தி போலும். வேதாரணியம் கோடிக்கும் பாம்பனுக்கும் நடுவிலுள்ள இடம். அரேபியா பக்கத்திலும் முத்துண்டு.



-16-

அக்டோபர் மாத மத்தியில் சிப்பிகள் காணப்படுகின்றன.

இந்த மாபார் நாடு முழுவதும் மக்கள் நிர்வாணமாகச்[1] செல்வதால் அங்கு தைக்கவாவது ஒரு தையற்காரன் கூட இல்லை. மானத்தைக் காப்பதன் பொருட்டே ஒரு சிறு ஆடை உடுத்துகின்றனர்; இது ஆடவர் பெண்டிர் என்ற இருபாலாருக்கு மொத்ததே.[2] ஏழையும் பணக்காரனும் இதற்கு விலக்கன்று; அரசனுங்கூட முன் கூறுவதைத் தவிர்த்து நிர்வாணமாகவே இருக்கின்றான். அரசனும் நிர்வாணமாகவே செல்லுகின்றானென்பது உண்மையே யாயினும், அவன் இடுப்பைச் சுற்றி நாணயமான ஒருடை உடுத்தி யிருக்கின்றான்; உயர்ந்த மாணிக்கம், கோமேதகம், மரகதம் முதலாய விலையுயர்ந்த அரதனங்கள் வைத்திழைத்த பதக்கமொன்று கழுத்திலணிந்திருக்கின்றான். கழுத்திலிருந்து வயிறு மட்டும் தொங்கும்படியான முத்தும் மாணிக்கமுமாகச் சேர்ந்து நூற்றுநான்கு[3] மணிகள் பட்டுக் கயிற்றில் கோத்த தாழ்வட மொன்று அணிந்திருக்கின்றான். இந்த முத்துமணி வடத்தினாலே அவன் வணங்கும் விக்கிரகங்களுக்கு 104 தரம் வணக்கம் சொல்ல வேண்டிய திருப்பதனாலே அதனை யணிந்துள்ளானென்று அங்குள்ளார் கூறுகின்றனர். அவர்களுடைய மதமும் வழக்கமும் அத்தகையது. அவனுக்குமுன் வந்த அவனது பூர்விகரான அரசரும் அவ்வாறே செய்தனர்; இவனும் அதனைக் கடைப்பிடித்தொழுக வேண்டியே அதை ஒரு பொருளாக வைத்தனர். அவர்கள் அன்றாடம் செய்கிற ஜபம் பசௌத, பசௌத பசௌத[1] என்பதாம்; இதனை அவர்கள் 104 தடவை ஜபிக்கின்றனர்.

முன்னர்க் கூறிய அரசன் கையில் விலையுயர்ந்த முத்துக்கள் பதித்த மூன்று கடகங்களும், காலில் அதே மாதிரியான சிலம்புகளும், விரல்களில் மிஞ்சிகளும் அணிந்திருக் கின்றான். இந்த அரசன் அவன் உடலில் அணிந்திருக்கும் பொன், முத்து இரத்தினங்களின் விலை ஒரு பட்டினத்தை விலைக்கு வாங்கக்கூடிய அவ்வளவு மதிப்புள்ள தொகைபெறும் [2]அவன் ஏராளமான திரவிய முடையவனாகையால் இது ஓர் அதிசயமல்ல. அன்றியும் அவை அவனுடைய நாட்டிலேயே அகப்படுகின்றன. இஃதன்றி அரைசகியோ [3]நிறைக்கு மேற்பட்ட முத்துக்களை நாட்டை விட்டு வெளியே கொண்டு போதல் கூடாதென இவ்வரசன் கட்டளையிட்டுள்ளான்; அன்றி வெளியேகொண்டுபோகவேண்டுமானால் மறை பொருளாகவே கொண்டு போக வேண்டும். இவ்வாறு பருமனுள்ள முத்துக்களை யெல்லாம் தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தாலே இந்த விதமான கட்டளையிட்டிருக்கின்றான்; ஆதலினால் இவனிடமுள்ள முத்தினளவு அளவிட்டுக் கூறவியலாதது. அன்றியும் பருமுத்துக்களுடையவர்களெல்லாம் அவற்றைத் தன்னிடம் கொண்டு வருவார்களாயின் அவற்றுக்கு ஒன்றுக்கு இரட்டி கொடுப்பதாக ஆண்டாண்டு தோறும் பறையறைவிக்கின்றான். அவ்வாறு மகிழ்ச்சியோடு செய்ய நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் முற்படுகின்றான்; அதனால் அவ்வரசன் அதததற்குள்ள விலையைக்

[1]நிர்வாண மென்றது ஐரோப்பியரைப் போன்று உடலை முழுமையும் மூடாமையைக் குறிக்கும். இந்நாட்டில் வெப்பம் அதிகமாகையால் இடுப்பில் ஆடை கட்டுவதுடன் நிற்கின்றனர்.

[2]மலையாளக் கரையில் பெண்டிர் மேலாடையின்றிருப்பினும் சோழ பாண்டி நாடுகளில் அவ்வாறிருந்ததாகத் தெரியவில்லை.

[3]நூற்றெட்டாக விருக்கவேண்டும்.

[1]இவருக்கு இவ்வாறு கூறியவர் இன்னதென்று விளங்கவில்லை. ஒருகால் பசுபதே யென்று சிலர் சொல்வதைக் கேட்டார் போலும். பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர ஜபம், காயத்திரி ஜபத்தைத் தவிர இவ்வாறு ஜபம் செய்ததாகத் தெரியவில்லை.

[2]So, let me tell you what this king wears, between gold and gems and pearls.

[3]நிஷ்கா நிறை.

கொடுத்து எல்லாவற்றையுந் தானே வாங்குகின்றான்.

இஃதன்றி இம்மன்னவனுக்கு ஐந்நூற்றுவர் மனைவியரிருக்கின்றனர்; நாட்டில் அழகு வாய்ந்த ஒரு மங்கையுண்டென்றுகேட்டால் அவளை யுடனே மணந்து கொள்கின்றான். அவன் ஒரு துக்ககரமான செய்கை செய்தான். இவன் சகோதரனுக்கு ஓர் அழகுள்ள மனைவி யிருந்தாள். அவளை இவ்வரசன் கைப்பற்றிக் கொண்டான். சகோதரன் பொறுமையுடையவனாதலால் வெளிக்காட்டவில்லை. [1]இவ்வரசனுக்கு அநேக பிள்ளைகளுண்டு. அரசனைச் சுற்றிப் பிரபுக்களான தலைவர்களநேகர் காத்துநிற்கின்றனர். இவர்கள் அரசனோடு குதிரை சவாரி செய்வர்; அவனுடனேயே யிருப்பர்; நாட்டில் அதிகாரஞ் செலுத்துவர்; அவர்களை அரசனது உரிமைச் சுற்றமென்பர். [2]அரசனிறந்ததும் அவனைச் சுடுகாட்டில் தீயிலிடுவர்; அப்பொழுது இந்த உரிமைச் சுற்றமும் தீப்பாயும். அந்த உரிமைச் சுற்றத்தார் இந்த உலகில் தோழர்களாக இருந்தது போல மறுவுலகிலும் தோழமை கொள்ளப் போவதாக அவர்கள் கூறுகின்றனர்.[3]

அரசனிறந்ததும் அவனது மக்கள்[4] அவனீட்டிய பொருளைத் தொடுவதில்லை. அவர்கள் தந்தை ஈட்டிய தேட்டத்தைப் போன்று தாங்களும் தேடவேண்டுமென்று கூறுகின்றனர். இதனால் ஏராளமான திரவியம் இந்த நாட்டிற் குவிந்திருக்கிறது.

இந்நாட்டில் குதிரைகள் உண்டாவதில்லை; அதனால் குதிரை வாங்குவதில் மிகுந்த திரவியம் செலவழிகிறது. அது எவ்வாறென்பதைக் கூறுவேன்: கிஸ் [1](Kis) [2]ஹோர்மஸ் (Hormes) தோபார் (Dofor) சோயர் [3](Soer) ஏடன் (Aden) என்ற இடங்களிலுள்ள வணிகர் பலவகைக் குதிரைகளைச்சேர்த்துக்கொண்டுவந்து இந்நாட்டிலும் இவனது சகோதரர் [4]அரசாளும் நாட்டிலும் விற்கின்றனர். இங்கு ஒரு குதிரை ஐந்நூறு சகி (Saggi) பொன்னுக்கு விற்கப்படுகிறது. அப்பொன் நூறு வெள்ளி மார்க்குக்குச் சமமாகும். இவ்வரசனே ஆண்டுதோறும் இரண்டாயிரம் குதிரைகள் வாங்குகின்றனன்; இவனைப்போலவே இவனது சகோதரர்களும் வாங்குவர். அவர்கள் அவ்வளவு வாங்கக் காரணம் ஆண்டு முடிவில் நூறு குதிரைகளே உயிரோடிருக்கின்றன; மற்றவை இறந்துவிடுகின்றன. அவற்றை, நன்றாகக் கவனியாமலிருப்பதா லிறக்கின்றன. அவர்கள் குதிரையைப் பராமரிக்கும் வழி யறியமாட்டார்கள்; அன்றியும் இலாடம்டிப்பவர்கள் இந்நாட்டிலில்லை. வணிகர் அந்நாட்டிலிருந்து தங்களோடு இலாடமடிப்பவர்களை யழைத்து வருவதுமில்லை. அவர்களாகவே வர முயன்றாலும் வணிகர் தங்கள் வியாபாரம் குறைந்து ஊதியம் போய்விடுமென்று கருதிஅவர்களை வரவிடுவதில்லை. இவர்கள் குதிரைகளை மரக்கலங்களிற் கொண்டு வருகின்றனர்.[5]

நான் கூறப்போகிற வழக்கம் அவர்களுள் உண்டு. ஒருவன் ஒரு குற்றத்திற்காகக் கொலைத்தண்டனை யடைந்தபோது, அவன் இன்ன தெய்வத்தின் பேரால் உயிர் விடுவேனென்று கூற அவனுக்கு உரிமையுண்டு. அவ்வாறே தண்டனையடைந்தவன் செய்துகொள்ள

[1]இச்செய்தி சரித்திரக்காரர் ஒருவருங் கூறவில்லை.

[2]ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்.

[3]அரசரோடு நட்புடைய பாவலர் பலர் தீப்பாய்ந்ததாகப் புறநானூறு முதலிய நூல்கள் கூறும்.

[4]பிள்ளைகள்.

[1]Kais.

[2]Hormusy.

[3]Sohar; இது, அரேபியாவிலுள்ள ஓமான் நாட்டின் புராதன தலை நகரம். ஓமான் குடாவிலிருக்கிறது.

[4]சேர, பாண்டிய, இரட்ட நாடுகள்.

[5]பட்டினப் பாலையில் புரவிகள் கால்வழியாக வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது கவனிக்கத் தகுந்தது



அரசாங்கம் உத்தரவு கொடுக்கிறது. அவனுடை உறவின் முறையாரும் நண்பரும் அவன்மேல் பன்னிரு கத்தியைக் கட்டி ஒரு வண்டியிலேற்றி ஊரிலுள்ளாரறியும்படியாக 'இவ்வீரன் இன்ன தெய்வத்திற்காக உயிர் துறக்கப் போகின்றா'னென்று கூறிச் செல்வர். எல்லோரும் குறித்த விடத்திற்கு வந்தவுடன், குற்றவாளி ஒரு வாளை யெடுத்துக்கொண்டு 'இத் தெய்வத்திற்காக நான் உயிர் விடுகின்றே'னென்று சொல்லி ஒரு கையில் குத்திக்கொள்வான். இதே விதமாக மற்றொரு கையிலுமாக, வயிற்றிலுமாகப் பலவிடங்களிலும் குத்திக்கொண்டு உயிர் விடுவான். அவன் இறந்தவுடன் சுற்றத்தார் அச்சவத்தை யெடுத்து மகிழ்ச்சியோடு தீயிடுவர். பெண்டிரும் தம் கணவனைத் தீமடுத்தபோது தாமும்அத்தீயில் விழுந்து உயிர்விடுவர். அவ்வாறு செய்வோரை எல்லோரும் கொண்டாடுவர்.

# சுந்தர சுலோசன

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

## இதழ் 8.

### "ஆறுமுக அப்பாவருக"

"அரும்பொனே மணியே என் அன்பே
[என் அன் பான
அறிவே என்னறி விலூறும்
ஆநந்த வெள்ளமே என்றென்று பாடி
ஆடினேன் நாடி நாடி [னேன்
விரும்பியே கூவினேன் உலறினேன் அல
மெய்சிலிர்த் திருகை கூப்பி [றினேன்
விண்மாரிஎன என் இருகண்மாரி பெய்
வேசற்றயர்ந் தேனியான் [யவே
இடும்பநேர் நெஞ்சகத்கள் வன்ஆனாலும்
இடைவிட்டு நின்றதுண்டோ [உனை
என்று நீ அன்று நான் உன்னடிமை யல்
யாதிலும் அறியாவெறுந் [லவோ
துரும்பனேன் என்னிலுங் கைவிடுதல்
[நீதியோ..."—தாயுமானர்.

"உன்னை மறந்திடுவேனோ
மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணக்கறியேன்
உன் ஆணை அதுநீ
என்னை மறந்திடுவாயோ
மறந்திடுவாய் எனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன்
எவர்க் குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய்
நீமறந்தாய் எனினும்
அகிலமெலாம் அளித்திடும்நின்
அருள் மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே
இருக்கின்றேன் மறவேல்
இது தருணம் அருட்சோதி
எனக்கு விளைந்தருளே."
—இராமலிங்கர்.

ஆ! ஈசா! இளமைப் பருவத்திருந்து உன்னைநான் மறவாது நின்றதன் பயன் என்னே! இளமையில் பெற்றோரை இழந்த பெரும் வாட்டம் நின்னடியை நாடவும் நீயே கதியென உன்னைப் பாடவும் ஓயாது நினைந்து நினைந்துருகவும் தூண்டியும் நின் எழிலைக் கண்ணாரக் கண்டு பேருவகை பூத்து ஆநந்தத்தில் திளைக்கெழும் பெரும் பாக்கியத்தை யான் பெறவில்லை. அறிவுங் கெட்டாது அருவமாய் அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தும் தனித்தும் நிற்கும் என் முருகாவோ! நின்னடி யார்க்குத் தொண்டு செய்திடின் உன்னைக் கண்டு இன்புறாஉம் பெரும் பேறு பெறுவேனென வெண்ணியன்றோ, என் இறைவ நான் கடன் வாங்கவுந் துணிந்தேன். "மருவும்அடியார்கள் மனதில்" இனிது விளையாடி இன்பத்தேன் சொரியும் என் "ஆறுமுக அப்பா!" நின்னாலன்றோ என் அன்னை - ஆ!....அன்பிற் சிறந்த என் அருமன்னை - இறந்தபின் அன்னை

யாகவும் அப்பனாகவும் நின்று, உரிமையின் இயல்பையும், அன்பின் பெருமையையும், ஒழுக்கத்தின் சிறப்பையும், பக்தியின் மாண்பையும், நின்னடிப் பெருமையையும் எனக் கறிவுறுத்திய மிதுனபுரி ஜமீந்தாராகிய சந்திர சேகரப்பிரபுவும், நிபருடன் கூடி யான் தூர்த்தனுயினேன் என எண்ணி என்னை வெறுக்கவும் நேர்ந்தது. கள்வனைப் போலுங் குடியனைப்போலும் யான் சென்ற ஓராண்டாக என் குருநாதனுறையுளில் ஒளிந்து உறையவும் நேர்ந்தது. ஏ! மயிலேறும் மன்னு! என்னுயிரினு முயர்ந்த என்னுயிர்க்காதலி சாரதாவும், நான் வேசியருறவான் ஒழுக்க மிழந்தேனென எண்ணவும் நேர்ந்ததே. நற்குண உறையுளாகிய சுலோசனையும், நான் தூர்த்தருடன் கூடித் தீயஒழுக்கங் கொண்டேனெனச் சந்தேகிக்கவுங் காலம் வந்து விட்டதே. அடியார்கள் வாழ்வே! ஒழுக்கத்திற் சிறந்த என்னுடன் பிறந்தோனாகிய மோகன சுந்தரமும் உண்மையையுணராது என்னைச் சந்தேகிக் கின்றனனே. ஆ! என்னே! என் விதியிருந்தவாறு! இளமையிலிருந்து துன்பத்தை நுகர்ந்தறியா நான் இவ்வளவு வேதனைகளையும் பொருட் செய்யாது நின்னெழிலைக் காண்டல் வேண்டும் என்னும் பேரவா கொண்டிருப்பது நீயறியாததோ? என் குருநாதரும் நின்னைக் கண்டின்புறுதற்குரிய நிலையை யானெய்து விட்டேனெனக் கூறியும் நின்னைக் காணவியலாது யான் வாடுகின்றேனே. அயனெனவாகி அரனெனவாகி அரியெனவாகி அவை மேலாய் மூவுருவின் முதலுருவாய் தனித்திலங்கும் என் ஆண்டவா! எவ்வொழுக்கம் பூண்டு எந்நெறிபற்றி என் குருநாதர் நின்னைக்கண்டு - நின் அழகிய உருவில் கலந்து - இன்பம் நுகர்ந்தனரோ அம்முறைகளையே யான் சிறிதும் வழுவாது கையாண்டும் நின்னைக் கண்ணுறுத தன் காரணமென்னை? என் பழவினை என் முன்னர் நின்று நின்னைக் காணுதவாறு தடுக்கின்றதோ? இன்றேல் நான் பெரும் பாபியென்று நின்னுருக் காட்டா தொளிக்கின்றயோ?

"அறிவா லறிந்துன் இருதாளிறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் — களைவோனே"
—அருணகிரியார்.

நீயென்னைக் கைவிடுதல் நீதியோ,

"கல்லாதகாயேன் எனினும் எனைக்
காக்குந் தாய்நீ என்றுலகம்
எல்லாம் அறியும் ஆதலினல் எந்தாய்
அருளார் திருத்தி யெனிற்
பொல்லாப் பழிவந்தடையும் உனக் கரசேயி
யான் புகல்வ தென்னே [னி
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தே
ஞானச் செழுஞ்சுடரே." [வே
—இராமலிங்கர்.

ஆதலின் எந்தாய்!

"அண்ட முடிதன்னிலோ பகிரண்ட மதனி
அலரிமண்டல நடுவிலோ [லோ
அனல்நடுவிலோ அமிர்த மதிநடுவிலோ
அகமுருகி மலர்கள் தூவித் [அன்பர்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்திலோ வெளியிலோ
திகழ்விந்து நாதநிலைதன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணுதநிலை யெனக்
கண்ட சூனிய மதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்
கருவிகரணங்க ளோய்ந்த [னிலோ
தொண்டர்களிடத்திலோ நீ வீற்றிருப்பது
தொழும்பனேற் குளவு புகலாய்..."
—தாயுமானர்.

ஆ! முருக.

"செந்நிலை புணர்ந் துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற் [யாத
சென்று செருகுந் தடந்தெளிதரத் தணி
சிந்தையு மவிழ்ந்த விழ்ந்துரை யொழித்
தென் செயலழிந்தழிந் தழிய மெய்ச்
சிந்தைவர என்று நின்தெரிசனைப் - படு
[வேனே"—அருணகிரியார்.

அழகும் இளமையும் இறைமையுந் தாய்மையும் ஒருங்கியைந்த திருமால் மருக!

"கண்ணுல் உனது திருவடியைக்
கண்டாதரவு பெருகி இருகையால்
தொழுதுன் திருக்கோயில் காலால்
வலஞ்செய்து உனதுபுகழ்



பண்ணு லுருகிப் புகழ்ந்து
கண்ணீர்பாயா எனையுந்
தாயாகப் பரிந்துவளர்க்கும் பெருங் [மும்
கருணை படைத்து விரிஞ்சைப்பதிவா
அண்ணல்வருக வுலகமுழு
தாண்டாய் வருக கதிதரும்எம்
ஐயாவருக ஆறுமுக அப்பா
வருக விளங்குகதிர்
வண்ணவருக மயிலேறும் மன்ன
வருக அடியார்கள் வாழ்வே
வருக தெய்வசிகா மணியேவருக வருகவே.
—மார்க்க சகாயதேவர்.

மூவுருவின் முதலுருவாய் தனித்திலங்கும் இறைவ! நான் பல்லாண்டுகளாகக் கண்டின்புற எங்கும் நின்மெய்யுருவைக் காட்டி.

"அறுமுகந் தனிலொரு முகந்தனை
அடியனேற் குறவாக்கிடீர்
அம்பகம் பனிரண்டி லொன்றில்
என்ஆணவங் கெடநோக்கிடீர்
வெறிகொள் பன்னிருகையில் ஒன்றில்
என்வெம் பவக்கடல் தடுத்திடீர்
விளங்கும் ஆறுசெவ் வாயில்ஒன்றினில்
வீடுசேர்மொழி கொடுத்திடீர்
செறியும்ஆறிரு செவியில் ஒன்றில்என்
செய்தியாவையுங் கேட்டிடீர்
செய்யமார்பம் ஓராறில் ஒன்றில்என்
செந்தமிழ்த் தொடை பூட்டிடீர்
தறுகண் வேடர்கள் உதவும்மின்கொடி
தனமும் அன்பர்கள் மனமும்நீள்
தணிகையங்கிரி முடியும் நண்பு
தழைத்த செங்கல்வ ராயரே."
—கந்தப்ப தேசிகர்.

மேலோதிய அரும்பாடலைக் கண்களை மூடி கண்களினின்றும் கண்ணீர் ஊற்றென வெதும்பி யூற்ற, முகத்தினில் வாட்டமும் ஞானவொளியும் ஒருங்கியைந் தொளிர, சண்முக சுந்தரம்இறைவனின் திருவுருவைக் காணுமாசையான் இரந்திரந்து பாடிப்பாடி அழுது நிற்கையில் அவணிருந்த அறையின் கதவு திறக்கப்பட, அரையிற் காவி பீதாம்பர மணிந்து, நெற்றியிலும் உடல் எங்கும் திருநீறிலங்க, சந்தனத் திலகம்இடையில்குங்குமப்பொட்டுடன் இலங்கக்கொழுத்துப் பருத்து, சிவந்த மேனியுடைய ஒருவேடம் அறையுள் நுழைந்து "அப்பா! சண்முகம்!" என விளித்தது. அக்குரலோசையைக் கேட்டதும், சண்முகசுந்தரம் கண்களைத் திறந்து ஓடோடியுஞ்சென்று அவர் திருவடிகளில் அடியற்ற பனைபோலும் வீழ்ந்து பணிந்து "சுவாமி" யென மறுமொழியீந்து அடக்கமாக ஒருபுறம் நின்றுன்.

"அப்பா சண்முகசுந்தரம்! நீ வருந்துவதைக்காண என்னுள்ள முருகுகின்றது. ஆனல் அவசரப்படுதல் நியாயமன்று. யான் பல்லாண்டுகளாக இடிப்புண்டு உணர்ந்த வழிகளை யெல்லாம் உனக் கறிவித்துள்ளேன். பக்குவ நிலையையும் நீ எய்து விட்டாயெனவும் உணர்வேன். ஓராண்டில் நீ இத்தகைய பெரிய நிலையை எய்தியது நின்குலஞ் செய்த புண்ணியமேயாகும். உன்னைச் சீடனாக யான் பெற்றதும் என்னுடைய பாக்கியமேயாம். "அவனருளால் அவனடி" வணங்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றும் நீ வீணுக வருந்துதல் நன்றன்று. சில தினங்களில் நீ பெறுதற்கரிய பெருங் காட்சியைக் கண்டின்புறுவாய். உலகம் தோன்றியும் ஒடுங்கும் இடமாகிய இறைவன் உனக்குருக் காட்டா தொழியான். எனவே, நீ கவலையற்றிடு."

"சுவாமி! என்உள்ளத்தைக்கொள்ளை கொண்ட அறுமுகப் பெம்மானைக் காண்டல் வேண்டுமெனும் பேரவாவினுல் யான்கொண்ட வீண் பழிகளையும் இழிவுரைகளையும், நீர் அறியீரா?

# இடியேறு

## காங்கரஸ் !

எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நேர்ந்திருக்கிறது. அஃதென்னே? காங்கரஸ் கலைக்கப்பட்டதேயாகும்.

காங்கரஸ் கலைக்கப்பட்டதற்கு உரிய காரணங்கள் பலபடக் கூறலாம். அக்காரணங்களை ஆராய்வதால் பயன் ஒன்றும் விளையாது. காங்கரஸ் கலைக்கப்படும் நிலைமை நேர்ந்தமை குறித்துத் தேசம் வருந்தும் என்பதில் ஐயமில்லை.

சட்ட மறுப்பை முற்றும் நிறுத்த வேண்டுமென அரசாங்கத்தார்கொண்ட பிடிவாதமும், அதை அறவே நிறுத்த மனங்கொள்ளாத தலைவர்கள் பிடிவாதமும் காங்கரஸைக் கலைத்துவிட்டன என்று சுருங்கச் சொல்லலாம். தேசத்தில் ஏற்பட்டுள்ள சோர்வும், ஒற்றுமையின்மையும், வகுப்புவாதமும், சுயநலமும், இன்ன பிறவும் அரசாங்கத்தைப் பிடிவாதத்தி லிருக்கச்செய்தன. அரசாங்கத்தின் பிடிவாதத்துக்கு எதிராகத் தலைவர்கள் கொண்ட பிடிவாதமும் காங்கரஸைக் குலைக்கச் செய்தது.

பூனாவில் கூடிய தலைவர்கள் மகாநாட்டில் பலர் காந்தியடிகளைக் குறைகூறுவதில் கருத்தைச் செலுத்தினரேயன்றிப் புதிய திட்டங் கோலிக் காங்கரஸை நன் முறையில் நடாத்துவதில் கருத்தைச் செலுத்தினரில்லை. சட்டமறுப்பை நிறுத்திச் சட்டசபையைப்பற்றல் முதலிய வழிகள் பல இல்லாமற் போகவில்லை.

சட்டமறுப்பை நிறுத்தல் தோல்விக்குறி என்று கருதுவது தவறு. 'சட்ட மறுப்பு' என்பது என்றும் நிலவத்தக்கதோர் இயக்க மன்று. அதை நிலையாக வைத்துப் பாதுகாக்க முயல்வதனுல், சோர்வும், பிறவும் விளைதல் இயல்பு. நமது தேசம் உள்ள நிலையில் சட்ட மறுப்பைச் சதாகாலம் போற்றிக்கொண்டிருத்தல் கூடாது. பல வழியிலும் பிரிவுபட்டுள்ள தேசத்தில் சட்டமறுப்பு இயக்கம் முழுவெற்றியை ஒருபோதும் தாராது. சட்டமறுப்பு இயக்கம் ஒருவித உணர்ச்சியை உண்டு பண்ணக் கருவியாக உதவுந் தகையது. அதை என்றும் ஓம்பக் கருதுவதால் நலன் விளையாது.

காந்தியடிகள் ஒருவர் என் செய்வார்? அவர் என்னென்னவோ செய்து பார்க்கிறார். தேசம் அவர்தம் முயற்சிக்குப் போதிய அளவில் துணை நிற்கும் நிலையிலில்லை.

தீண்டாமை காந்தியடிகள் முயற்சிக்குப் பெருந்தடையாக நிற்றல் வெள்ளிடைமலை. அவ்வுண்மை கண்டே தீண்டாமை விலக்கல்மீது அடிகள் கருத்துச் செலுத்தலானர். அக்கருத்துக்குப் பூனமகாநாடு இடர் செய்தது என்றே கூறலாம். காந்தியடிகள் சில காலம் அரசியலில் தலைப்படாது, தீண்டாமை விலக்கலில் மட்டுந் தலைப்பட்டுத் தொண்டாற்ற உறுதி கொண்டிருக்கலாம்.

தலைவர்கள் உள்ளத்தில் தோன்றிய பலதிற எண்ணங்கள் சுழன்று சுழன்று கடைசியில் காங்கரஸையே வீழ்த்திவிட்டன. காங்கரஸ் அமைப்பு வீழ்ந்தாலும், காங்கரஸினின்றும் எழுந்து தேசத்தின் நாலு பக்கங்களிலும் பாய்ந்து ஒளிர்ந்து கொண்டுள்ள காங்கரஸின் காந்த சக்தி வீழ்ந்துபடாது. அச்சக்தியை அழித்தல் எவராலும் இயலாது. அச்சக்திக்குப் பிறப்பிடமாயிருந்த நிலயத்தைச் சீர்படுத்த வேண்டுவது தேசபக்தர்கள் கடமை.

காங்கரஸ் சக்தியைப் புதுக் குழல்கள் வழியாகப் பாய்ச்ச முயலுதல் வேண்டும். தற்போதைய காங்கரஸ் அமைப்புக் குலைந்தமையான், அது கொண்ட சட்ட மறுப்பு முதலியனவும் ஒழிந்தன என்று சொல்லவேண்டுவதில்லை. சட்ட மறுப்பில் தேசத்தார்க்கு எவ்வளவு ஊக்கம் தொடக்கத்தில் எழுந்ததோ, அதைப் பார்க்கிலும் பதின்மடங்கு சோர்வு இப்பொழுது அதன் மாட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போது சட்ட மறுப்புமீது கருத்துச் செலுத்துவதே அநாவசியம். சட்ட மறுப்பில் கருத்துச் செலுத்தாது ஆக்கவேலைகளில் கருத்துச் செலுத்திக் காங்கரஸ் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்க முயல்வது சிறப்பு. இதற்கு என் செய்வது?

அரசியல் ஞானிகள் ஓரிடத்தில் ஒன்றுபட்டுத் தேசம் தற்போதுள்ள நிலைமைக்கேற்ற முறையில் ஒழுங்குபட்ட திட்டங் கோலுதல்வேண்டும். அத்திட்டத்தை மாகாண மகாநாடுகள் வழி உறுதிப்படுத்திப் பின்னே பொது அமைப்பில் உறுதிப்படுத்தலாம். இவ்வழியில் முயல்வது நலம்.

பொது அமைப்பை உண்டுபண்ணுது ஆங்காங்கே தன்னந் தனியராய்ச் சிறு சிறு அமைப்புகளை உண்டுபண்ணிச் சட்டசபையைப் பற்ற முயன்று வருவது தேசியக் கொலையாக முடியுமென்பதைத் தலைவர்கள் உணர்ந்து நடப்பார்களாக.



## ஸ்ரீமேஹர் பாபாஜி

ஸ்ரீமேஹர் பாபாஜி அவர்களின் வரலாறும் மொழிகளும் அடங்கிய ஒரு நூல் வரப் பெற்றேம். இந்நூலை ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழிபெயர்த்தவர் திருவாளர் எஸ். வி. இரத்தின சபாபதி அவர்கள். மொழிபெயர்ப்பு நன்முறையில் அமைந்திருக்கிறது. இத்தொண்டில் தலைப்பட்ட திருவாளர் - இரத்தின சபாபதி அவர்கட்கு நமது நன்றி உரியதாக. ஸ்ரீமேஹர் பாபாஜி குருவருள் பெற்று, ஆண்டவன் இன்பத்தில் திளைத்துத் தாம் பெற்றுவரும் அநுபவங்களை உலகுக்கு அறிவுறுத்திவருதல் முதலிய குறிப்புகள் இந்நூற்கண் சுருக்கமாக ஓதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீபாபாஜியின் திருமொழிகள்சில நூற்கண் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இக்காலத்துக்கு இன்றியமையாதன. கடவுள் உண்மையில் நம்பிக்கை குறைந்து வரும் இந்நாளில் ஸ்ரீமேஹர் பாபாஜியின் வாழ்வும் உபதேசமும் உலகிற்குப் பெரிதும் பயன்படுவன என்பதில் ஐயமில்லை. திருவாளர்—இரத்தின சபாபதி அவர்கள் மொழிபெயர்த்துள்ள ஸ்ரீ பாபாஜியின் திருமொழிகள் சில வருமாறு:—

"மனிதனுடைய வாழ்க்கையின் முக்கிய இலட்சியமென்னவென்று பார்க்கும்போது அது தன்னுள்ளிருக்கும் ஜீவாத்மாவை எல்லாமாய் எங்குமாய்ப் பரவியிருக்கும் பரமாத்மாவாகக் கண்டு அதனோடு ஒன்றி ஆனந்தத்தை அநுபவித்தலேயாம் என்பது தோன்றும்."

"ஒரு குறுகிய வரம்பிற்குட்பட்ட 'நான்' என்பது ஒழிந்தபோது பரந்ததும் வரம்பில்லாததுமாகிய 'நான்' என்பது தானகவே தோன்றும்."

"எங்கும் பரந்து இருக்கும்படியான அந்த ஒரு கடவுளே கல்லாகவும், இரும்பாகவும், தாவரமாகவும் (வாயில்லாப்) பிராணியாகவும், மனிதனுகவும் இருந்து பற்பல விதமாக நடிக்கிறார். அவர் அந்த அநுபவங்களுள் ஒவ்வொன்றன் மூலமாகவும், தம்முடையசொந்த மாயத்திலுைம், தந்திரத்திலுைம் அவதாரங்கள் பல எடுக்கிறார். மற்றும் பிரிக்கமுடியாத அந்தக் கடவுளே அறிந்த ஒரு தோற்றத்தின் உஜ்ஜீவிப்பின் மூலமாகவோ அல்லது ஆத்ம ஞான முதிர்ச்சி பெற்ற தோற்றத்தினுலோ மாயத்திற்கும் தந்திரத்திற்கும் மேலாகவுள்ள தம்முடைய உண்மை நிலையை அநுபவிக்கிறார்."

"உண்மைப் பக்தி (தெய்வ வழிபாடு) என்பதற்கு மதசம்பந்தமான சடங்குகளை அத்யாவசியகமாக அநுசரிக்க வேண்டுமென்பதோ, மந்திரங்களை ஜபிக்கவேண்டு மென்பதோ அர்த்தமல்ல; ஆனல், கடவுளின் ஏதாவதொரு நாமத்தை இடைவிடாது ஸ்மரணை செய்தல் அல்லது சதா சர்வகாலமும் இறைவனைப்பற்றி நினைத்தல் என்பதே நிச்சயமான அர்த்தமாகும்."

"அன்புருவாய இறைவர் உன்னுடைய வீடாகிய புத்தியில் பிரவேசிக்க எப்போதும் சித்தமாகவே யிருக்கிறார்; ஆனல், அது உன்னுடைய எண்ணற்ற பொய்யான அன்புகளினல் (பற்றுக்களினல்) நிறைந்திருப்பதனல், அவர் பிரவேசிப்பதற்கு இடமுண்டாகவில்லை. அதனல், அவர் பிரவேசியாதிருக்கின்றார்."

"அன்பு மயமான ஆண்டவனிடமிருந்து நீ பிரிவதற்கு நீயே காரணமாயிருக்கிறாய். நீ 'நான்" என்பதை வேரோடழித்து விடுவாயாயின், அவனுடன் ஐக்கியப்படும் பெரும் பேற்றை அடைவாய்."

"உன்னுடைய கூந்தலானது கத்தரிக்கப் படவேண்டுமானால், நீ உன்னுடைய தலையை ஒரு நாவிதனுக்கு ஒப்புவித்து, அவ்வேலையானது முடியும் வரை இணங்கி யிருக்கிறாய். அவ்வாறே நீ கடவுளை அறிதல் வேண்டுமானால், நீ சதாசாரியப் பெருந்தகையாகிய சற்குரு ஒருவரிடம் சரண்புகுதல் வேண்டும்."

"மதத்தலைவர்கள் எனப்படுவோர் ஓழிவின்றி எப்பொழுதும் பழக்கம், மதநம்பிக்கைகள் என்பவைகளுக்காகச் சச்சரவிடுகின்றனர்; அவற்றால் அவர்கள் தங்களுடைய சீடர்களை அஞ்ஞானமாகிய பெரும்பள்ளத்தில் தள்ளுவதற்குமாத்திரம் சாமர்த்திய முடையவராயிருக்கின்றனர். குருடன் குருடனையே பின் பற்றுவான். இருட்டாகிய அஞ்ஞானத்தில் இருக்குமொருவன் பிறருக்கு எவ்வாறு அறிவு விளக்கஞ்செய்தல் கூடும்? தனக்கே உண்மையான மதம் என்பது எது என்று தெரியாதவன் மற்றவர்களுக்குமதத்தைப்பற்றி என்ன ஞானத்தைப் போதிக்கவல்லான்?"

"கிரம்பப்பேசும் ஒருவன் மாருத தத்துவ ஞான முள்ளவனாக இருப்பதில்லை. மிகத் துரிதமாகச் சொற்களை மாரியாகச் சொரிவது பேரறிவுடைமையைக் குறிக்கும் அடையாளமாகாது. அபரிமிதமான சொற்களைக் கொண்டு பேசுவதை விவேகம் என்று தப்பிதமாக எண்ணிவிடாதே."

"பாலுடன் கூடிய பரிசுத்தமான மரக்கறி உணவே மனிதனுள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையைப் பெருகச் செய்தற்கு உதவி புரிகிறது. ஆனால், முட்டைகள், மாமிசம், இறைச்சி, மதுபான வகையராக்கள் மனிதனுள்ளிருக்கும் மிருகத் தன்மையை மேலெழச் செய்கின்றன."

"பல ஆயிரக்கணக்காயுள்ள விரோதிகளைக் கொன்று அதனால் வெற்றிபெறும் பராக்கிரமத்தினும் ஒரு விரோதியின் மனதைக் கவர்வதே மிகப் பெரிய பராக்கிரமமாகும். கடுமையான விரோதியையும் இடைவிடாது நல்லபிப் பிராயத்துடன் மனம் நினைக்குமானால் அவனையும் அன்பார்ந்த சிநேகிதனாக மாற்றும் மகோன்னத சக்தி மனதிற்குப் பெரிதும் உண்டு."

"உன்னைப்பற்றிப் புறங்கூறுபவரிடத்துக் கோபம் கொள்ளாதே; ஆனால் அவரிடத்துத் தயை யுடையவனாயிரு. ஏனெனில் அவர் அப்படிச் செய்வதனால் உன்னுடைய வினையின் சேமிப்பைக் குறைத்து உனக்குத் தொண்டு புரிகிறார்; அதனால் தம்முடைய வினைகளின் பெருக்கத்தை மிகவும் அதிகமாக்கிக்கொள்ளுகிறார். அதற்காக அவர்மீது நீ கருணைகொள்வாயாக."

"உன்னுடைய நிழல் உன்னை விட்டுப் பிரியாதிருக்கிறது. அதுபோல் கடவுள் உனக்கு வெளியே இல்லை; ஆனால், உன்னுள்ளே இருக்கிறார்; உன்னுடைய நிழலை நீ பிடிக்கமுடியாததுபோல நீ கடவுளை சர்வசாதாரணமான வழியில் அடைதல் முடியாது; பல கோடிக்கணக்கானவர்களில் ஒரு சிலரே கடவுளை அறிகின்றனர்."

"என்று, இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பிரிவு ஏற்படுத்தப்பட்டதோ அன்றேஇந்தியாவும் தாழ்த்தப்பட்டுவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்படும்போது தான், இந்தியா ஏகபோகமாகத்தனிப்பெருஞ் சிறப்பினையுடைய நாடாக ஆகாவிட்டாலும், உலகிலுள்ள சிறந்த நாடுகளில் ஒன்றாக விளங்கும் பெருமை வாய்ந்ததாகும்."

"செய்யும் சீர்திருத்தங்கள் அனைத்தும் கல்வியை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டுமேயன்றி பலாத்காரத்தைக் கொண்டிருத்தல் கூடாது. மக்கள் விரும்பாத எந்த மாறுபாட்டையும் சட்ட சபையின் மூலமாகக் கொணர்தல் கூடாது. எந்தச் சீர்திருத்தத்தையும் செய்யு முன்பு முதன் முதலாக மக்களுடைய மனப்பான்மையை மாற்றி, அவர்கள் தற்போது இருக்கும் நிலைமையினின்றும் மாறி முன்னேற்றமடைதற்குச் சீர்திருத்தம் வேண்டும் என்பதை உணரும்படி செய்தல் வேண்டும்"

நூலின் விலை அணா 4; விலாசம்: எஸ். வி. இரத்தினசபாபதி, 17, நாட்டுப் பிள்ளையார் கோயில் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.




# பெரிய புராணம்

## மூலமும்

## அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

## வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!**

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக்கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

**அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.**

### சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.
" " " வெளியூர்—தபாற் செலவுடன் " 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர்:—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... ... | 0 | 8 |
| பக்தியோகம் ... ... | 0 | 10 |
| கர்மயோகம் ... ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 |
| எனது போர் முறை ... ... | 0 | 2 |
| பவாஹாரி பாபா ... ... | 0 | 3 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... ... | 0 | 2 |
| முக்திநெறி ... ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை.

## கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.



"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

## இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண்ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து .... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்.... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... ... | 0 | 4 |
| சமரச சன்மார்க்க போதம் .... .... ... | 0 | 8 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணி யார்டர் கமிஷன் கழித்து வி.பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை,

வித்வான் த. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிலேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, வெடி சம்பந்தகுண்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியில் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,
வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

## வரப்பிரசாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, நபும்ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனும்! கேட்லாக் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

இதோ! தாது புஷ்டி

## மதன மஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனும்! வைத்திய வித்தியா இனும்!!
விபரம் வேண்டுவோர் இனுமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. M K. B. அண்டு கோ.,
No. 14, டத்தோகிராமாட் ரோட், பினங்கு.
T. D. மதுரா நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொளும்பு.
ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொளும்பு.

## தாதுபுஷ்டிக்கு

### மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு இவைகளைப்போக்கி மன உற்சாகத்தை திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி முதலியவைகளை யுண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா 2.
வி. பி. செலவு வேறு.

**C. மலையப்பசாமி,**
நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, S. I.

## சத்தியம் விளங்க வேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே
அணைபோலிக் கொள்வது நல்லது

உங்கள் எதிர்கால நிலைமையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிமித்தம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருபாவம் முற்றிலுஞ் சொல்ல ரூபா 10; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2; குறைவி சயங்களை உரைக்க ரூபா 2.

C. J. கிருஷ்ணசாமி,
38, வயித்தியநாத முதலி தெரு, சென்னை.

## அரிய தமிழ் நூல்கள்

| | ரு. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 | 0 |
| முருகவேள் பனுவல் திரட்டு .... .... .... | 1 | 0 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 | 12 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 | 4 |
| குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 | 4 |
| விநாயகர் பனுவல் திரட்டு .... .... .... | 0 | 6 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் | | |
| கிளேஸ் .... .... .... .... | 0 | 5 |
| வெடி. ரப் .... .... .... .... | 0 | 3 |
| சிவபுண்ணியத் தெளிவு .... .... .... .... | 0 | 3 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... .... | 0 | 6 |

## திரு அருட்பா - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது. நூதன விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணு 5.
(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - தும்மப கோவும்)

## திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 15[illegible] "NAVASAKTI"

ஒரே கடவுள் ஒரே சமயம்

மக்கள் அனைவருஞ் சகோதரர்

# சமரச சன்மார்க்க போதம்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

இயற்றியது.

உலகம் விரும்பும் சமத்துவம், சுதந்திரம், சகோதரநேயம் என்னும் மூன்றையும் இந்நூல் அறிவுறுத்துகிறது.

மக்கள் வளர்ச்சிக்குத் தடைகளாயுள்ள மூட வழக்க ஒழுக்கங்களை ஒழிப்பதற்குரிய சீர்திருத்த முறைகளை இந்நூல் நன்கு விளக்கியிருக்கிறது.

ஒரே கடவுள் ஒரே சமயம் என்னும் உண்மையை இந்நூலிற் காணலாம்.

இயற்கை நுட்பங்கள் இந்நூற்கண் இனிது ஓதப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அவசியம்.

விலை அணா 8.

## சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மஹாபாரதத்தில் கூறியிருக்கும் பீஷ்மாசாரியாருடைய பெரிய தகப்பனார் தேவாபி என்னும் சீவன் முத்தர், இப்போது இமயமலையில் மாஸ்டர் குதூமி என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் தனிமொழிகளாகக் கொடுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களும் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், ஆங்கிலத்தினின்று சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு "சாதன சதுட்டயம்" என்ற பெயருடன் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே நான்கு சாதனங்களைக் கையாள வேண்டிய முறையைக் காட்டுவதோடு தன்னைத் தான் அறியக்கூடிய விசார சாகரமாயுமிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520; 29 அத்தியாயம்; உயர்ந்த காகிதம். விலை ரூபா 2

## திவ்ய ஞான தீபம்

இது, பாழ்வெளி - விகாசமுறை - தேகங்கள் - புனர் ஜன்மவிருத்தி - கர்மவிருத்தி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முத்தர்கள் - குருநாதனைக் காணும் வழி - சிஷ்யத்வப்படிகள் - ஞானபூமிகள் - முத்தர் நிலைகள் - மாட்சி முதலிய பொருள்கள்பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 330 - பக்கங்கள் கொண்டது. நல்ல பெதர்வெயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.